Registered as a News Paper in Sri Lanka

# தினக்கதிர்

தினசரி

THINAKKATHIR DAILY

දිනක්කතිර්

ஒளி - 02 - கதிர் - 46 | 04.06.2001 | திங்கட்கிழமை | பக்கங்கள் - 08 | விலை ரூபா 5/-

நகையா!
22 கரட்டில் தெரிவு
செய்ய இன்றே நாடுங்கள்
சரண்யா ஜுவலர்ஸ்
பிரதான வீதி
களுவாஞ்சிகுடி
தொ. பேசி 065 . 50071

# புலித்தடையைத் தளர்த்த அரசுக்கு சர்வதேச அழுத்தம்!

(நமது அரசியல் நிருபர்)

**தமிழீழ விடுதலைப்புலிகள் மீதான தடையை நீக்க முடியாதென இலங்கை அரசு மறுத்து வருவதையடுத்து பேச்சுவார்த்தைகளை ஆரம்பிப்பதற்கு ஏதுவாக; தற்காலிகமாகவேனும் புலிகள் மீதான தடையை நீக்குமாறு சர்வதேச நாடுகள் சில/ அரசு மீது அழுத்தம் கொடுத்து வருகின்றது.**

பொது ஜன ஐக்கிய முன்னணியையும், ஜனாதிபதி சந்திரிக்காவையும், புலித்தடை நீக்கம் தொடர்பில் சாதகமான முடிவெடுக்கும்படி செய்வதற்காக இந்நாடுகள் தீவிரமாக முயன்று வருகின்றன. கொழும்பிலிருந்து வெளியாகும் ஆங்கிலப் பத்திரிகையொன்று கொழும்பு அரசியல் வட்டாரங்களை மேற்கோள்காட்டி செய்தி வெளியிட்டிருக்கின்றது.

தற்காலிகமாக ஒரு குறிக்கப்பட்ட காலத்துக்கேனும் தடையை நீக்கிப் பேச்சுக்களை ஆரம்பித்தால், பேச்சின் போக்கைப் பொறுத்து அதனை நீடிப்பது தொடர்பாக ஆலோசிக்கலாம் என இந்நாடுகள் அரசுக்கு ஆலோசனை கூறியுள்ளன.

குறைந்தது ஆறு சர்வதேச நாடுகளேனும் இது தொடர்பில் அரசுடன் தனிப்பட்ட முறையில் பேசிவருவதாக மேலும் தெரிவித்துள்ள அப்பத்திரிகை இதில் நான்கு மேற்கு நாடுகளும் இரு கிழக்கு நாடுகளும் எனத் தெரிவித்துள்ளது. இப் பிரச்சினை தொடர்பில் அரசுக்கு இருக்கும்நெருக்கடிகளை நாம்புரிந்து கொள்கின்றோம். ஆனால், புலித்தடையை நீடிப்பதாக கொள்கின்றோம். புதிதாக புலிகளைத்தடை செய்யுமாறு சர்வதேச நாடுகளைக் கோருவதோ, நாடு சமாதானத்தை அடைய ஏதுவாக இருக்காது" என ஒரு மேலைத்தேய அரசியல் அறிஞர் கருத்து வெளியிட்டுள்ளார்.

### அரசின்குற்றச்சாட்டுக்கு புலிகளின் நியாயமும்

பேச்சுவார்தைகளை தொடங்குவதற்கு புலிகள் புதிது புதிதாக நிபந்தனைகளை விதிக்கின்றார்கள் எனக்கூறி, புலித்தடையை நீக்க முடியாதென அண்மையில் அரசு தரப்பில் குற்றஞ்சாட்டப்பட்டது. ஆனாலும்தாம் ஒரு தலைப்பட்மாக கடைப்பிடித்த போர் நிறுத்தத்திற்கு அரசு சாதகமான பிரதிபலிப்பைக்

(8ம் பக்கம் பார்க்க)

## ஆலங்குளத்தில் துப்பாக்கி சூடு; ஒரு பெண் காயம்

(ஏறாவூர் நிருபர், வேதாந்தி)

மட்டக்களப்பு மாவட்டத்தில் வாகரை ஆலங்குளம் பிரதேசத்தில் நேற்றுக்காலை இடம் பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவமொன்றில் குடும்பப் பெண்ணொருவர் காயமடைந்து வாழைச்சேனை மாவட்ட வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

வாழைச்சேனை-பொலன்னறுவை பிரதான வீதிப்பக்கமிருந்து இவ்வேட்டுத் தீர்க்கப்பட்டதாகவும் சம்பவவேளை படையினர் ரோந்து நடவடிக்கையிலீடுபட்டிருந்ததாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

வழமையான ரோந்து நடவடிக்கையில் ஈடுபடும் படையிரே துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்வது வழமையாகும். 37 வயதான எஸ்.தங்கம்மா என்ற பெண்ணே காயமடைந்தவர். வாழைச்சேனைப் பொலிஸார் மேலதிக விசாரணைகளை நடாத்தி வருகின்றனர்.

## மட்டக்களப்பில் பெரும் மழை

(காத்தான்குடி நிருபர்)

மட்டக்களப்பு மாவட்டத்தில் தொடர்ந்து நிலவும் வரட்சியான கால நிலைக்கு மத்தியில் நேற்று (02-06-2001) மாலை முதல் மழை பெய்து வருகின்றது. நேற்றிரவு 9.00 மணி முதல் நேற்று (03-06-2001) காலை 9.00 மணிவரையிலான காலப்பகுதியில் 66.5 மில்லி மீற்றர் மழை பெய்துள்ளதாக மட்டக்களப்பு வானிலை அவதான நிலையம் தெரிவித்துள்ளது.

கடந்த சில மாதங்களாக மட்டக்களப்பு மாவட்டத்தில் நிலவும் கடுமையான உஷ்ணத்தினால் பொது மக்கள் பல்வேறு அசௌகரியங்களை எதிர் கொண்டு வந்தனர். திடீரெனப் பெய்த

(8ம் பக்கம் பார்க்க)

## முன்னாள் நீதியரசர் பாலகிட்ணர் காலமானார்

(நமது நிருபர்)

மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் முன்னாள் தலைமை நீதியரசர் கிருஷ்ணபிள்ளை பாலகிட்ணர் (வயது70) சனிக்கிழமை மாலை கொழும்பில் ஒரு பொது நிகழ்வில் உரை யாற்றிக் கொண்டிருந்த சமயம் மயங்கி விழுந்தார். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டபோது அவர் உயிரிழந்துவிட்டதாக அறிவிக்கப்பட்டது.

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியின் கொழும்பு பழைய மாணவர் சங்கம் நடத்திய 'அக்கரைப் பச்சை' கலை நிகழ்வு சனிக்கிழமை மாலை கொழும்பு பம்பலப் பிட்டி சரஸ்வதி மண்டபத்தில் இடம்பெற்றது. யாழ். இந்துக் கல்லூரியின் பழைய மாணவரான பாலகிட்ணர் இந்நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக அழைக்கப் பட்டிருந்தார்.

அரங்கம் நிறைந்திருந்த கூட்டத்தின் மத்தியில் மாலை 7 மணியளவில் தமது பிரதமவிருந்தினர் உரையை நிகழ்த்துவதற்கு, அவர் எழுந்த போது, கொழும்பு பழைய மாணவர் சங்கத்தின் தலைவர் சோமசேகரம் அவருக்கு மாலை அணிவித்தார். அதையடுத்து அவர் உரை நிகழ்த்தத் தொடங்கினார்.

"இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்துகொள்வதற்கான அழைப்பு குறுகிய கால

(8ம் பக்கம் பார்க்க)

**உத்தேச கல்முனை கரையோர மாவட்டம் தமிழ் பேசும்மக்களின் வரப்பிரசாதம்**

*- அமைச்சர்பேரியல் -*



ஆனால் இது உங்களுக்கு
தேர்தல் பிரசாரம்.......

## புனித மரியாள் ஆலயத்தில் புத்த விகாரை

(நமது நிருபர்)

யாழ் சுழிபுரம் திருவடிநிலையில் அமைந்திருந்த புனித மரியாள் ஆலயத்தை தகர்த்து அவ்விடத்தில் புத்தவிகாரையொன்றை படையினர் நிறுவியுள்ளதாகத் தெரிவிக்கப் படுகிறது.

இது தொடர்பாக கத்தோலிக்க மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

இவ் விகாரையை சுற்றி பத்துக்கு மேற்பட்ட உல்லாச விடுதிகளை அமைத்துள்ளதாகவும் விடுமுறையினை களிக்கும் படையினர் தங்கள் உறவினர்களுடன் வந்து இந்த விடுதியில் தங்கிச் செல்கின்றனர்.

அதே சமயம் மீனவர்களின் மீன்பிடிப் படகுகளை எடுத்து உல்லாசமாக கடலில் விளையாடுவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

**உடனடி வேலைவாய்ப்பு**

1. முஸ்லிம், முஸ்லிம் அல்லாத வீட்டுப் பணிப்பெண்களுக்கு முற்றிலும் இலவசமாக, சவூதி அரேபியாவுக்கு அனுப்பி வைக்கப்படும். வயதெல்லை 25 தொடக்கம் 40 வரை (குவைத், பஹ்ரைன், ஜோர்தான், டோகா கட்டார் போன்ற நாடுகளுக்கும் அனுப்பப்படும்)

1. டோகா கட்டார் இலும் உடனடி வேலைவாய்ப்பு (ஆண்களுக்கு)

- ALUMINIUM FABRICATORS,
- ALUMINIUM INSTALLER,
- ALUMINIUM FABRICATORS,
- ALUMINIUM FITTER.
- TILE PIXER,
- MASON,
- CARPENTER,
- PAINTER,
- ELECTRICIAN,
- ELECTRONIC TECHNICIAN

போன்ற வேலைவாய்ப்புகளும் உண்டு
சான்றிதழ்களுடன் நேரடியாக வரவும்.

உடனடிப் பயணம்

நியூபாஹிம் என்டப்பிரைஸஸ்
LL No -736
283/1 பிரதான வீதி, கொழும்பு.
விசாரணைகளுக்கு:
இல:15/1, 15/2, பிரதான வீதி,
காத்தான்குடி -02
065-47090
ADVT.

## நேபாளத்தின் புதிய மன்னராகப் பொறுப்பேற்றுள்ள மன்னரின் தம்பி கொலைக்கு காரணமா?

(காத்மண்டு)

நேபாள மன்னர் பிரேந்திராவும் மகாராணி ஐஸ்வரியாவும் மற்றும் அரச குடும்பத்தைச் சேர்ந்த என்மரும் சுட்டுக்கொல்லப்பட்ட சம்பவத்தில் தலைநகர் காத்மாண்டுவில் இல்லத்தில் இருந்த மன்னர் பிரேந்திராவின் சகோதரர் கயனேந்திரா உடனடியாக அரண்மனையிலிருந்து ஹெலிக்கொப்டரில் அனுப்பப்பட்டு அரண்மனைக்கு அழைக்கப்பட்டதும்



மன்னரையும் மற்றவர்களையும் சுட்டுக்கொன்றுவிட்டு தன்னையும் சுட்டுக்கொண்டதாக கருதப்பட்டும் முடிக்குரிய இளவரசர் திபேந்திரா நினைவிழந்த நிலையில் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருக்கையில் அரண்மனைச் சம்பிரதாயப்படியும் அரசியல் அமைப்பின் படியும் முடிக்குரிய இளவரசர் திபேந்திரா பட்டத்துக்கு தெரிவு செய்யப்பட்டிருப்பது அவர்

(8ம் பக்கம் பார்க்க)

# தினக்கதிர்

த.பெ. இல்: 06
155.திருமலை வீதி,
மட்டக்களப்பு,
தொ.பே.065.22554

E-mail :- tkathir@snet.lk


## புதிய அரசியலமைப்பா சமாதானப் பேச்சா?

இலங்கையின் இனப்பிரச்சினைக்கு சமாதானத் தீர்வு காண்பதற்கு அரசும் விடுதலைப் புலிகளும் பேச்சுவார்த்தை நடத்தி ஒரு சமரச தீர்வு காண்பதற்கு விடுதலைப்புலிகளுக்கு இலங்கை அரசு விதித்த தடையே இன்று தடையாக இருக்கிறது.

தடை போட்டவர்களே இத்தடையை நீக்க வேண்டும். அப்போதுதான் கௌரவமாகப் பேச்சு நடத்துவதற்கு ஏற்ற சூழ்நிலை இருக்கும் என்பது விடுதலைப் புலிகளின் கோரிக்கை.

விடுதலைப் புலிகள் மேலும் மேலும் நிபந்தனை விதித்துக் கொண்டிருக்காமல் பேச்சுவார்த்தைக்கு வர வேண்டும் என்று அரசாங்கம் கூறி வருகிறது.

இந்தத் தடை பேச்சுவார்த்தைக்கு தடையாக இருக்கும் போது புதிய அரசியல் யாப்பை நிறைவேற்றினால் இனப்பிரச்சினை உட்பட சகலபிரச்சினைகளும் தீர்ந்து விடுமென்று ஜனாதிபதி கூறி வருகிறார்.

புதிய அரசியலமைப்பை நிறைவேற்றுவதற்கு எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சியின் ஒத்துழைப்பும் கோரப் போவதாக ஜனாதிபதி சொல்கிறார்.

எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சியோ பேச்சுவார்த்தைக்குத் தடையாக இருக்கும் தடை பற்றி இதுவரை கருத்துக் கூற மறுத்துவருகிறது.

தடையை முற்றாக உடன் நீக்காவிட்டாலும் தற்காலிகமாகத் தடையை நிறுத்தி வைக்கலாம் என்று வெளிநாடுகள் சிலவும் யோசனை கூறியிருப்பதாக கூறப்படுகிறது.

ஆனால் இப்போதுள்ள நிலையில் தடையைப் பற்றிக் கவலைப் படுவதை விட புதிய அரசியலமைப்பை பற்றியே ஜனாதிபதியும் அரசும் கவலைப்படுவதாக தெரிகிறது.

புதிய அரசியலமைப்பை நிறைவேற்ற வேண்டுமென்பதில் அரசுக்கு ஆதரவு கொடுக்கும் தமிழ்க் கட்சிகளும் தீவிரமாக இருக்கின்றன.

விடுதலைப் புலிகளுடன் பேச்சு நடத்தினாலும் சரி நடத்தாவிட்டாலும் சரி இதர தமிழ்க் கட்சிகளுடன் பேச்சு நடத்தலாமென்று இந்தக் கட்சிகள் யோசனை தெரிவிக்கின்றன.

தமிழ்க்கட்சிகள் பல விடுதலைப்புலிகளுடன் தான் பேச்சு நடத்தி தீர்வு காண வேண்டுமென்று கூறிவருகின்றன. புலிகள் மீதான தடையை நீக்க வேண்டும் எனவும் கூறிவருகின்றன.

விடுதலைப்புலிகளுடன் பேசாவிட்டாலும் பரவாயில்லை. மற்றத் தமிழ் கட்சிகளுடன் பேச வேண்டும் என்று கோரும் முன்னாள் இயக்கங்கள் புதிய அரசியலமைப்பையும் வரவேற்கின்றன.

பிரச்சினைகளுக்குரியவர்கள் என்று போரிட்டுக் கொண்டிருப்பவர்களும் விடுதலைப் புலிகள் தான் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கு புலிகளுடன் தான் பேச வேண்டும்.

புதிய அரசியலமைப்பில் பிரச்சினைகள் தீர்ந்துவிடுமென்றால் நோர்வேயின் அனுசரணையுடன் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்காக விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தைக்கு ஏன் ஆயத்தப்படுத்துவதாகக் காட்டிக்கொள்ள வேண்டும்.

விடுதலைப் புலிகளுடன் நடத்தும் பேச்சுவார்த்தையிலும் புதிய அரசியலமைப்புத்தான் பேச்சுவார்த்தைக்குரிய விஷயமா?

ஏற்கனவே தயாரித்து வைத்திருக்கும் அரசியல் யாப்பை வைத்து இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்காக விடுதலைப் புலிகளுடன் பேச்சு நடத்துவதால் என்ன பயன் கிடைக்க முடியும்.

நாட்டைப் பிரிக்கத் தேவையில்லை. இலங்கையின் ஒருமைப்பாட்டுக்கு குந்தகம் ஏற்படாத வகையில் தமிழீழத்துக்கு மாற்றாக சுயாதிபத்தியமுள்ள சமஷ்டி அமைப்பு யோசனை பற்றி பரிசீலிக்க தயாராக இருப்பதாக புலிகள் தெரிவித்திருக்கிறார்கள்.

இந்த நிலையில் அதிகாரப் பரவலாக்கல் என்ற சில சலுகைகளைக்கொண்ட அரசியல் யாப்பை வைத்து உரிமைக்காகப் போராடுபவர்களுடன் பேசி என்ன முடிவைக் காணமுடியும்.

சில அற்ப சலுகைகளுக்காகவா இவ்வளவு தியாகங்களும் போராட்டங்களும் என்று மக்கள் கேட்கமாட்டார்களா?

தமிழ் மக்களும் இந் நாட்டில் கௌரவமாக, பாதுகாப்புடன், சுதந்திரமாக, உரிமையுடன் வாழ்வதற்கான நியா யமான திட்டத்தை முன் வைத்துப் பேசுவதற்கு அரசு முன்வர வேண்டும்.

இந்தப் பேச்சுவார்த்தையை நல்ல முறையில் முடித்துத் தீர்வு காணப்பட்ட பின் புதிய அரசியலமைப்பை உருவாக்குவதே நியாயமும், நடைமுறைக்கு ஏற்றதுமாகும்!

# கடைசி சந்தர்ப்பத்தையும் நழுவவிடக் கூடாது

**அன்பார்ந்த சிங்கள மக்களே என்று சிங்கள மக்களுக்கு வேண்டுகோள் விடுக்கும் ஒரு பிரசுரத்தை தமிழீழ மக்கள் கட்சி வெளியிட்டிருக்கிறது. அதன் சுருக்கம் இங்கு தரப்படுகிறது.**

ஈழத் தமிழர்களின் தேசிய உரிமைப் போராட்டமானது கடந்த 50 வருடங்களுக்கு மேலாக தொடர்ச்சியாக நடைபெற்று வருகிறது. முதல் 3 தசாப்தத்தில் அரசியல் பேச்சு வார்த்தைகள், அஹிம்சை வழிப்போராட்டங்கள் என அமைந்தது. ஆயுதம் ஏந்திய விடுதலைப் போராட்டமாகப் பரிணமித்து இருபத்தைந்து வருடங்களாகிறது. இவ்வளர்ச்சியின் ஒரு கட்டமாக இன்று எமது விடுதலைப் போராட்டம் சர்வதேச சமூகத்தின் முனைப்பான அக்கறையைப் பெற்றுள்ள போராட்டமாகியுள்ளது.

ஈழத்தமிழராகிய நாம் எமது அரசியல் விடுதலையை மாத்திரமின்றி இத்தீவிலுள்ள அனைத்து மக்களினது விடுதலையையும், ஜனநாயகத்தையும் சமத்துவத்தையும் சுதந்திர வாழ்வையும் நேசிக்கின்றோம். அது மாத்திரமின்றி உலகெங்கிலுமுள்ள அடக்கப்படும் சுரண்டப்படும் மக்களின் விடுதலையின் ஒரு பகுதியாகவே எமது விடுதலையை நாம் காண்கின்றோம்.

எமது விடுதலைப் போராட்டம் அடிப்படையில் தேசங்களுக்கிடையில் சமத்துவத்திற்கான, சுயநிர்ணயத்துக்கான போராட்டமாகும். எவ்வாறு சிங்கள தேசம் ஒரு தனியான தேசமோ அவ்வாறே ஈழத் தமிழகமும் ஒரு தனியான தேசமாகும். உலகில் நிலவும் எல்லாத் தேசங்களையும் போலவே எமக்கும் சுயநிர்ணய உரிமையுள்ளது. எமக்கென தனியான தேசிய இருப்பு உள்ளது. பிரத்தியேகமான நீண்ட வரலாறு உள்ளது. ஒரு தேசத்தின் சுய நிர்ணய உரிமையின் அடிப்படையில் தான் 1977ம் ஆண்டு பொதுத் தேர்தலில் தமிழீழ குடியரசினை அமைப்பதற்கான எமது விருப்பத்தினை ஜனநாயக முறையினூடாக மனப்பூர்வமாகத் தெரிவித்தோம். இவ் அரசியல் முடிவு ஸ்ரீலங்கா அரசினால் ஏற்றுக் கொள்ளப்படவில்லை. மாறாக எமது தேசத்தின் மீது குரூரமான பொலிஸ்,இராணுவ அடக்கு முறைகளும் அழித்தொழிப்பு நடவடிக்கைகளும் கட்டவிழ்த்துவிடப்பட்டன. இவ்வாக்கிமிப்புக்களுக்கு எதிராகவே நாம் கடந்த 25 வருடகாலமாக இரத்தம் சிந்திப் போராடி வருகிறோம்.

### ஈழத்தமிழரின் சுய நிர்ணய உரிமையும் தேச அரசும்

இப்போதிருக்கும் ஸ்ரீலங்கா அரசுக் கட்டமைப்பிற்குள் இங்குள்ள அனைத்துத் தேசத்து மக்களும் சமத்துவமாக வாழ முடியாதா? என நீங்கள் கேட்கலாம். ஸ்ரீலங்கா அரசின் கீழ் ஒரு அரசியல் யாப்பிற்கு உட்பட்டு சமத்துவமாக வாழ்வதற்கு கடந்த காலங்களில் நாம் எத்தனையோ முயற்சிகளைச் செய்து பார்த்து விட்டோம். சத்தியாக் கிரகங்கள் உண்ணாவிரதங்கள்,ஹர்த்தால்கள், பாராளுமன்ற வழிமுறைகள் இப்படி எத்தனையோ...ஆனாலும் ஈழத்தமிழர்கள் நேர்மையாக மேற்கொண்ட சமத்துவ உரிமைகளுக்கான முயற்சிகள் அத்தனையும் ஸ்ரீலங்கா அரசின் ஆட்சியாளர்களால் கேவலப் படுத்தப்பட்டது. மொத்தத்தில் நாம் பல தடவை மிக மோசமாக ஏமாற்றப்பட்டோம்.

தேசிய பிரச்சினைகுத் தீர்வு காண மேற்கொள்ளப்பட்ட பல ஒப்பந்தங்கள் சிங்கள அரசு தலைவர்களால் கிழித்தெறியப்பட்டன. அஹிம்சைப் போராட்டங்கள் வன்முறை கொண்டு நசுக்கப்பட்டன. அரச பயங்கரவாதத்தைப் பயன்படுத்தி சிதைக்கப்பட்டது. நாளுக்கு நாள் எமது மக்கள் மீதான கொலைகளும் கொடுரங்களும் அதிகரித்து வந்தன. திட்டமிட்டு முற்றிலுமாக ஓரங்கட்டப்பட்டோம். இப்படிப்பட்ட சிங்கள தலைவர்களின் ஆட்சியின் கீழ் இரண்டு தேசங்களும் ஒன்றாகவும் ஒற்றுமையுடனும் வாழ்வது முடியாதென்பதை 1958,1977,1979,1981 இனக்கலவரங்களும் 83 இனப்படுகொலையும் சந்தேகமின்றி நிரூபித்தன. அரசும் அரசபடைகளும் திட்டமிட்டு இந்த இன அழிப்பை மேற்கொண்டமை வெளிப்படை. பயங்கரவாதத் தடைச்சட்டம்,அவசரகாலச் சட்டங்கள் இன்னும் இவை போன்றவை எமக்கு எதிராகவே கொண்டு வரப்பட்டன. புதிய அரசியல் யாப்பும் அதன் மீதான திருத்தங்களும் அப்படியே. தொடர்ச்சியான யுத்தப் பிரகடனமும் கடுமையான அழித்தொழிப்பு நடவடிக்கைகளும் எமது எதிர்காலம் பற்றிய நிச்சயமற்ற தன்மையை ஏற்படுத்தியது.

தாங்கமுடியாத தொடர் அடக்கு முறைகளின் விளைவாக ஸ்ரீலங்கா அரசின் அரசியல் யாப்பினை எம்முடையதென இதுவரை எம்மால் உணர முடியவில்லை. அவ்வரசு உருவாக்கிய தேசிய கீதத்தை மனதில் ஏற்று எம்மால் இசைக்க முடியவில்லை. அவை அனைத்தும் எம்மீதான அடக்கு முறைகளின் குறியீடாகவே காணப்பட்டன. இத்தனைக்கும் பிறகு ஒற்றையாட்சியில் எப்படி நாம் வாழ முடியும்? எனவே தான் நாம் எமக்கென ஒரு அரசியல் யாப்பு, எமக்கென தேசிய கீதம், தேசியக் கொடி, எமக்கென சட்டங்கள், சட்டவாக்க அமைப்புக்கள் என்பவற்றிற்காக தொடர்ச்சியாக போராடி வருகிறோம். இன்று எமது விடுதலைப் போராட்டம் அதன் உச்சக் கட்டத்தினை அடைந்துள்ளது.

இந்த ஐம்பது வருடகால கசப்பான அனுபவப் பின்புலத்தில் சிங்கள தேசமும் அரசியல் ரீதியிலும் சமூக அளவிலும் ஆழமாகப் பிளவுண்டு கிடக்கிறது மட்டுமல்ல உணர்வு ரீதியாகவும் உளவியல் ரீதியாகவும் பிளவுண்டு தான் கிடக்கிறது. இந்த உண்மையையும் நாம் அனுபவ ரீதியாக ஒப்புக் கொள்வோம். அவ்வாறு ஒப்புக் கொண்டால் தான் நம் முன் உள்ள தடைகளை உளப்பூர்வமாக நாம் கடந்து செல்ல முடியும். காயங்களை ஆற்றிக்கொள்ள முடியும். மக்களின் நல்வாழ்விற்குத் தடையாகவுள்ள அடக்கு முறையிலிருந்து விடுதலை செய்ய முடியும்.

தமிழ் மக்களாகிய நாம் எதிர்பார்ப்பது எதனை? முற்றிலும் அரசியல் சமத்துவம் மிக்க ஒரு கௌரவமான அரசியல் தீர்வு. யாருக்கும் தீங்கிழைக்காத எவருக்கும் தீங்கிழைக்க முடியாத ஒரு அரசியல் ஏற்பாடு. இதனையே நாம் கோருகிறோம். இந்த உரிமைகளை அடைவதற்காகவே நாம் போராடுகிறோம். எமது நீண்ட போராட்டமானது எம்மீது அடக்கு முறைகளையும் அட்டூழியங்களையும் தொடர்ச்சியாக மேற்கொண்டுவரும் ஸ்ரீலங்கா அரசுக்கு எதிரானதே. இவ் விடுதலைப்போரில் உள்நாட்டு மக்கள் விரோதிகளையும், அவர்களின் முகவர்களையும் அடையாளம் கண்டு எதித்து நாம் விரட்டியடிப்போம். எங்கிருந்தோ வந்து எம்மை அடிமைப்படுத்திட நினைக்கும் அந்நிய சக்திகளையும் நாம் விரட்டியடித்தே தீருவோம்.

அரசியல் பேச்சுக்கள் மூலம் ஈழத்தமிழரின் அரசியல் விருப்புக்களை உறுதிப்படுத்த முடியாமல் போனால் இரத்தம் சிந்திப் போராடுவதன் மூலம் எமது விடுதலையை பெற்றுக்கொள்வதொன்றே எமக்கிருக்கும் ஒரே வழியாகும். அப்போது எமது சுயநிர்ணய உரிமையை ஆயுதப்போராட்டத்தின் மூலம் பெற்றுக் கொள்வது தான் எஞ்சியிருக்கும் முடிவானதும் இறுதியானதுமான தெரிவாக இருக்கும்.

நம் அனைவருக்கும் இப்போது கிடைத்துள்ளது கடைசிச் சந்தர்ப்பமாகும். எமது மக்களின் சமத்துவமான அரசியல் உரிமைகளை அரசியல் வழியிலும் அரசியல் பேச்சுக்களின் மூலமாகவும் பெறுவதற்கான வாய்ப்பே அது. அதனை காத்திரமாகப் பயன்படுத்துவதில் எங்கள் பாத்திரத்தை நாங்கள் ஆற்றி வருகிறோம்.

எனவே ஈழத் தமிழர்களின் சுய நிர்ணய உரிமை மற்றும் அரசியல சமத்துவம் என்பவற்றை உறுதிப்படுத்திக் கொள்வதற்கு சிங்கள மக்கள் அனைவரதும் ஆதரவை ஈழத் தமிழர் சார்பில் கோருகிறோம்.

இத்தீவில் பிறந்து, வளர்ந்து, வாழ்ந்து தம் உரிமைகளுக்காக போராடிக்கொண்டிருக்கும் அனைத்து மக்களுக்கும் பிறந்த புதுவருடத்திற்கான இனிய வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறோம்.

●●●●

## மீலாதுன் நபி விழாவும் சமாதானப் பிரார்த்தனையும்

(காத்தான்குடி நிருபர்)

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன முஸ்லீம் சேவை, ஸ்ரீலங்கா இஸ்லாமிய நிலையத்துடன் இணைந்து நடாத்தும் மீலாதுன் நபி விழாவும் நாட்டின் அமைதி சமாதானத்திற்கான விஷேட பிரார்த்தனை வைபவமும் இம்மாதம் 6ந் திகதி கொழும்பு ஸ்ரீலங்கா இஸ்லாமிய நிலையத்தில் நடைபெறவுள்ளதாக இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன முஸ்லீம் சேவைப்பணிப்பாளர் எம். எஸ்.பௌசுல் ஹசன் தெரிவித்தார்.

இவ்விழாவில் அமைச்சர்கள், பிரதியமைச்சர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள், முஸ்லீம் இயக்கங்களின் பிரதிநிதிகள் உட்பட பலர் கலந்து கொள்ளவுள்ளனர்.

# கிழக்கு மாகாண கரையோரப் பிரதேசங்கள் —ஆசிய வங்கி உதவியுடன் அபிவிருத்தி—

(ஏறாவூர்)

கிழக்கு மாகாணத்தின் கரையோரப் பிரதேசங்கள் ஆசிய அபிவிருத்தி வங்கியின் நிதியுதவியுடன் அபிவிருத்தி செய்யப்படவுள்ளதாக கடற்றொழில் நீரியல் வளப் பிரதியமைச்சர் முகைதீன் அப்துல் காதர் தெரிவித்தார்.

கடற்றொழில் நீரியல்வள அமைச்சு இத்திட்டத்தினை அமுல்படுத்தவுள்ளதாகவும் அவர் கூறினார்.

இத்திட்டத்தின் கீழ் திருகோணமலை, மட்டக்களப்பு மற்றும் அம்பாறை ஆகிய மாவட்டங்களின் கரையோரப் பிரதேசங்களில் நீர் வாழ் உயிரினங்கள் மற்றும் இயற்கைச் சூழலைப் பாதுகாக்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுள்ளன. அத்துடன் மீன்பிடித்துறை அபிவிருத்தி, மீனவர்களுக்கான வீடமைப்புத் திட்டம் என்பனவும் செயற்படுத்தப்படவுள்ளன.

**மட்டக்களப்பு வாவி பற்றி ஆராய்ச்சி**

இந்தத் திட்டத்தின் கீழ் மட்டக்களப்பு மாவட்டத்தில் வாழைச்சேனை மீன்பிடித் துறைமுகம் அபிவிருத்தி செய்யப்படவுள்ளதோடு முகத்துவாரத்தில் நங்கூரமிடும் தளமொன்றும் அமைக்கப்படவுள்ளது. மட்டக்களப்பு வாவி தொடர்பான ஆராய்ச்சியினை கிழக்குப் பல்கலைக்கழகம் மேற்கொண்டு வருகிறது. உபவேந்தர் எம். எஸ்.மூக்கையா தலைமையில் இதற்கென விஷேட குழுவொன்று அமைக்கப்பட்டுள்ளது.

இந்த நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கென திருகோணமலையில் அமைக்கப்பட்டுள்ள காரியாலயம் திங்கட்கிழமை திறக்கப்படுகிறது. இதனையடுத்து விஷேட கூட்டமொன்று கல்வித் திணைக்கள கேட்போர் கூடத்தில் காலை 9.00 மணிக்கு கிழக்குப் பல்கலைக்கழக உபவேந்தர் எம். எஸ்.மூக்கையா தலைமையில் நடைபெறுகிறது.

இக்கூட்டத்தில் அம்பாறை, மட்டக்களப்பு, திருகோணமலை மாவட்டங்களின் அரச அதிபர்கள் சமுர்த்தி அதிகார சபை அதிகாரிகள், மற்றும் கடற்றொழில் நீரியல்வள அமைச்சின் முக்கியஸ்தர்களும் கலந்து கொள்கின்றனர்.

## பாதுகாப்பு வேலி மிதிவெடியில் இராணுவ சிப்பாய் காலிழந்தார்

(ஏறாவூர் நிருபர்)

வாழைச்சேனை துறைமுக இராணுவ முகாம் எல்லைப் பிரதேசத்தில் புதைக்கப்பட்டிருந்த மிதிவெடியொன்றில் சிக்கிய இராணுவ வீரர் ஒருவர் காலை இழந்துள்ளார்.

சனிக்கிழமை மாலை இச்சம்பவம் இடம்பெற்றது.

எம்.ஈ.லீலாரத்ன என்ற இராணுவ வீரரே பாதிக்கப்பட்டவர்.

முகாமைச் சுற்றியுள்ள பாதுகாப்பு வேலியோரத்தில் புதைக்கப்பட்ட மிதிவெடியில் தவறுதலாக இந்த இராணுவீரர் சிக்கிக் கொண்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

காயமடைந்தவர் பொலநறுவை இராணு ஆஸ்பத்திரியில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார்.

## பெற்றோலில் மசகு எண்ணை கலப்படம் கண்டுபிடிப்பு

(காத்தான்குடி நிருபர்)

காத்தான்குடி ஆரையம்பதி எல்லையிலுள்ள எரிபொருள் நிரப்பு நிலையமொன்றில் பெற்றோலுடன், மசகு எண்ணெய் (ஓயில்) கலப்படம் செய்து விற்பனை செய்தது வாகனச் சொந்தக்காரர்களால் கண்டு பிடிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறான கலப்பட நடவடிக்கையினால் ஒரே நேரத்தில் பத்துக்கும் அதிகமான மோட்டார் சைக்கிள்கள் பழுதடைந்துள்ளன. வைத்தியதிகாரியொருவரின் மோட்டார் சைக்கிளும் இதனுள் அடங்குமென மோட்டார் சைக்கிள் திருத்தும் 'கராஜ்' உரிமையாளர் ஒருவர் தெரிவித்தார்.

இப்பிரதேசத்தில் அதிக இலாப நோக்குடன் பெற்றோலுடன், மண்ணெண்ணெய், மசகு எண்ணெய் (ஓயில்) போன்றவற்றை கலப்படம் செய்வது தொடர்ந்து நடைபெற்று வருகின்றது. இதனால் மோட்டார் சைக்கிள் மற்றும் வாகனங்களின் இயந்திரங்கள் பழுதடைந்துவருவதும் குறிப்பிடத்தக்கது.

## "பாடசாலைகளிலேயே சிறந்த தலைவர்கள் உருவாகின்றனர்"

(மூபா)

"தலைவர்கள் பலர் நம்மிடையே மறைந்து காணப்படுகின்றார்கள். இவர்களுக்கு வாய்ப்பும், பயிற்சிகளும் கிடைக்கும் போது முன்னே வருகின்றார்கள். வாய்ப்புக்களை, சந்தர்ப்பங்களை பாடசாலைகளே வழங்குகின்றன. இதனால் பலர் உருவாகிப் பிரகாசித்ததை நாம் அறிவோம். நவீன தொழில்நுட்ப அறிவும், ஆங்கிலத் தேர்ச்சியும் எதிர்கால தலைமைத்துவத்திற்குப் பெரிதும் தேவையாகும்"

இவ்வாறு சம்மாந்துறை வலயக் கல்விப் பணிப்பாளர் ஐ.எம்.இஸ்ஸதீன் அண்மையில் சம்மாந்துறை அல்மாஜான் மகளிர் மகா வித்தியாலயத்தில் இடம் பெற்ற தலைமைத்துவ பயிற்சிக் கருத்தரங்கில் பிரதம அதிதியாகக் கலந்துகொண்டு உரையாற்றிய போது குறிப்பிட்டார்.

அதிபர் எஸ்.எச்.எம். முஸ்தபா தலைமையில் இடம் பெற்ற இக் கருத்தரங்கில் அட்டாளைச்சேனை கல்விக் கல்லூரி விரிவுரையாளர் எம்.ஐ.எம்.முஸ்தபா அட்டாளைச்சேனை ஆசிரியர் கலாசாலை விரிவுரையாளர் எம்.கே.எம். மன்சூர் பிரதிக் கல்விப் பணிப்பாளர் ரீ.ஏ.பீர்முகம்மது, பிரதி கல்விப் பணிப்பாளர் எஸ்.எல்.ஏ.சலாம், கோட்டக்கல்விப் பணிப்பாளர் எஸ்.எம்.அலியார் முகாமைத்துவ உதவியாளர் மு.எல்.பசீர் ஆகியோர் இவ்விழாவில் பங்குபற்றிச் சிறப்பித்தனர்.

சம்மாந்துறை வலயத்தைச் சேர்ந்த ஐந்து முன்னணிப் பாடசாலைகளில் இருந்து நூற்றுக்கும் மேற்பட்ட மாணவத் தலைவர்கள் இந்நிகழ்வில் பங்கு பற்றினர்.

## இன்று வைகாசிப் பொங்கல்

(காரைதீவு நிருபர்)

காரைதீவு ஸ்ரீ கண்ணகை அம்மன் ஆலயத்தின் வருடாந்த வைகாசிப் பொங்கல் இன்று (திங்கள்) நடைபெறும்.

நாளை (செவ்வாய்) காலை திருக்குளிர்த்தி வைபவம் இடம்பெறும்.

நேற்று ஞாயிறன்று காரைதீவுப் பகுதியில் பெய்த மழையினால் வெப்பம், புழுதி, தணிந்து தண்மையாகக் காணப்படுகின்றது.

இன்று வழமைபோல கடைத் தெருக்களும், அமைக்கப்பட்டுள்ளன. பக்தர்கள் சாரிசாரியாக ஆலயத்திற்கு வந்து செல்கின்றனர்.

## பொத்துவில் படுகொலை; ஆணைக்குழு நியமிக்கக் கோரிக்கை

**-ஜனாதிபதியிடம் சங்கர் எம்.பி மனு-**

(காரைதீவு நிருபர்)

பொத்துவிலைச் சேர்ந்த சீவரெத்தினம் சிவலிங்கம் (வயது 42) படுகொலை செய்யப்பட்டமையை விசாரிக்க நியாயமான விசாரணைக்குழுவொன்று நியமிக்கப்படவேண்டும் என்று ஜனாதிபதியிடம் அம்பாறை மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் குணசேகரம் சங்கர் கேட்டுக்கொண்டிருக்கிறார்.

அவரது தொலைநகல் கடிதத்தில் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது:-

"கடந்த ஞாயிறன்று பொத்துவில் ஊர்க்காவல் படை வீரரொருவர் புலிகளால் சுட்டுக் கொல்லப்பட்டமைக்குப் பழிவாங்கும் சம்பவமாக சிவலிங்கம் என்ற குடும்பஸ்தர் படுக்கையில் வைத்து கொலை செய்யப்பட்டிருக்கிறார்.

அவரது மனைவி, பிள்ளை என்போர் படுகாயமுற்று ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டிருக்கிறார்கள்.

எனவே, படுகொலை செய்யப்பட்ட சிவலிங்கம் என்பவரின் குடும்பத்திற்கு நியாயமான நஷ்டஈடு வழங்கப்படவேண்டும்.

மாவனல்லை மற்றும் பிந்துனுவெவ சம்பவங்களுக்கு அரசினால் வழங்கப்படக்கூடிய நஷ்டஈட்டை சிவலிங்கத்திற்கும் வழங்க வேண்டும்.

சம்பவத்தில் சம்பந்தப்பட்ட பொலிஸ் அதிகாரியை உடனடியாக இடமாற்ற வேண்டும். பொலிஸ் கான்ஸ்டபிள் யாராவது இருந்தால் இடைநிறுத்தப்படவேண்டும்.

அப்பாவி தமிழ் மகன் பழி வாங்கலில் கொல்லப்படும் தொடர் இன்றுடன் நிறைவடைய வேண்டும்.

## நாளை ஒன்றுகூடல்

(காரைதீவு நிருபர்)

சம்மாந்துறை தேசிய பாடசாலை விழிப்புணர்வு ஒன்றுகூடலை நாளை செவ்வாய்க்கிழமை காலை 10.00 மணிக்கு பாடசாலை அப்துல் மஜீத் மண்டபத்தில் நடாத்த சம்மாந்துறை மாலை வட்டம் ஏற்பாடு செய்துள்ளது.

இக் கல்லூரியின் பழைய மாணவர்கள் அனைவரும் இக்கூட்டத்திற்கு அழைக்கப்பட்டுள்ளதாக மாலை வட்ட செயலாளர் என்.மஹ்றுப் (ஜே.பி) தெரிவித்தார்.

இக்கூட்டத்தில் 200 பேர் இரு மணி நேரம் கல்லூரி வளர்ச்சி பற்றிக் கலந்துரையாடுவார்கள்.

## மட்டக்களப்பு மாவட்டத்தில் 15 வருடம் மூடியிருக்கும் ஏழு பாடசாலைகள்

(காத்தான்குடி நிருபர்)

மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள 7 பாடசாலைகள் கடந்த 15 வருடங்களுக்கும் மேலாக மூடப்பட்டுள்ளதாக மட்டக்களப்பு வலயக் கல்விப் பணிப்பாளர் ரி. பொன்னம்பலம் தெரிவித்தார்.

மட்டக்களப்பு சிங்கள மகா வித்தியாலயம், ஜெயந்திபுர சிங்கள வித்தியாலயம் பெரிய புல்லுமலை றோமன் கத்தோலிக்க தமிழ் கலவன் பாடசாலை, பெரிய புல்லுமலை சிங்கள வித்தியாலயம், ஏறாவூர் சிங்கள வித்தியாலயம், கோப்பாவெளி, சிப்பிமடு சிங்கள வித்தியாலயம் என்பனவே மூடப்பட்டுள்ள பாடசாலைகளாகும்.

இதே வேளை ஒல்லிக்குளம் அல்-ஹும்றா வித்தியாலயம் 1990ம் ஆண்டு முதல் மூடப்பட்டுள்ள போதிலும், அப்பாடசாலை காத்தான்குடியில் இயங்கி வருவதாக வலயக் கல்விப் பணிப்பாளர் பொன்னம்பலம் மேலும் எமது செய்தியாளரிடம் தெரிவித்தார்.

## காத்தான்குடியில் கல்விக்கண்காட்சி

(காத்தான்குடி நிருபர்)

கல்விச் சீர்திருத்தத்தின் புதிய பாடத்திட்டத்திற்கமைய வாழ்க்கைத் தேர்ச்சி கண்காட்சி மட்/அந்நாஸர் வித்தியாலயத்தில் சிறப்பாக இடம் பெற்றது. மட்டக்களப்பு வலயக் கல்விப் பணிப்பாளர் ரி.பொன்னம்பலம் வைபவ ரீதியாகக் கண்காட்சியைத் திறந்து வைத்தார்.

காத்தான்குடி அந்-நாஸர் வித்தியாலயத்தின் மாணவர்களால் தயாரிக்கப்பட்ட பல்வேறு கைப்பணிப் பொருட்கள் கண்காட்சியில் வைக்கப்பட்டிருந்தன. பாடசாலை அதிபர் அல்ஹாஜ் ஏ.எல்.உதுமான் சாகிபு தலைமையில் கண்காட்சி திறப்பு விழா வைபவம் நடைபெற்றது.

## பாடசாலை பதில் அதிபர்களை நிரந்தரமாக்குவதில் தாமதம்

பதில் அதிபர்களை நிரந்தரமாக்க நேர்முகப்பரீட்சை நடாத்துவதில் வடக்கு கிழக்கு மாகாண கல்வியமைச்சு திணைக்களம் தாமதப்பட்டு வருகிறது. ஆசிரியர் நியமனம் வழங்குவதிலும் பின்னடித்து வருகிறது. எனவே அமைச்சிற்கு இலங்கை கல்வி நிருவாக சேவையைச் சேர்ந்தவர்கள் நியமித்து நடவடிக்கைகளை துரிதப்படுத்துங்கள் என்று இ.த.ஆ.சங்கம் கல்வி அமைச்சரைக் கேட்டுள்ளது.

எதிர்வரும் 12ம்திகதி ஆளுநருடனான சந்திப்பில் இது தொடர்பாகப் பேசி முடிவெடுப்பதாக அமைச்சர் கூறினார்.

**சேவையில் சேருங்கள்**

இலங்கை கல்வியியலாளர் சேவையில் சேவைக்கால ஆசிரிய ஆலோசகர்களையும், தொலைக்கல்வி போதனாசிரியர்களையும் சேர்க்குமாறு சங்கம் கேட்டதற்கு அடுத்த தடவை செய்யலாமென்று அமைச்சர் பதிலளித்தார். யாழ்ப்பாணம், அம்பாறை மாவட்டங்களில் தொண்டர் ஆசிரியர் சேர்க்கப்படுவது போன்று வடக்கு கிழக்கில் ஏனைய 06 மாவட்டங்களுக்கும் சமமான முறையில் சேர்க்கப்படவேண்டும் என்று சங்கம் கேட்டுள்ளது. தமிழ் பாடசாலைகளுக்கு தமிழ் அதிபர்களே நியமிக்கப்பட வேண்டும். குருநாகலில் இன்றும் வேற்றின அதிபர் உள்ளார் என்றதற்கு...உடனடியாக இது நிவர்த்திக்கப்படல் வேண்டும். பெயர் விபரத்தைத் தாருங்கள் என்று கல்வி அமைச்சர், தூதுக்குழுவிடம் கேட்டார். தமிழர் ஆசிரியர் சங்க தூதுக்குழு செயலாளர் மகாசிவம் தலைமையில் அமைச்சரை அண்மையில் சந்தித்துப் பேசியது.

## மது ஒழிப்பு தினம்

(காரைதீவு நிருபர்)

சர்வதேச மது ஒழிப்பு தினத்தன்று சம்மாந்துறை பிரதேச செயலக சமுர்த்திப் பிரிவினர் மது ஒழிப்பு விஷேட கொடி விற்பனையிலீடுபட்டனர்.

விஷேட கொடியினை பிரதிக் கல்வியமைச்சர் முதல் ஏ.எல்.எம்.அதாவுல்லா பாராளுமன்ற உறுப்பினர் யூ.எல்.எம்.மொகைதீன் ஆகியோருக்கு அணிவித்தனர்.

பிரதேச செயலாளர் எம்.ஐ.அமீர் தலைமையில் இத்தினம் அனுஷ்டிக்கப்பட்டது.

மது ஒழிப்பு தினம் தொடர்பாக பதாதைகளும், சுவரொட்டிகளும் அவர்களால் ஒட்டப்பட்டிருந்தன.

# நேபாள மன்னர் குடும்பக் கொலை----------

## விரைவில் உண்மை தெரியும்

### பிரதமர் கொய்ராலா

(காத்மண்டு)

சுட்டுக் கொல்லப்பட்ட நேபாள மன்னர் மகாராணி ஐஸ்வரியராய் முடிக்குரிய இளவரசர் நிரஞ்சன், இளவரசி சுருதி ஆகியோரின் இறுதிச் சடங்குகள் சனிக் கிழமை இரவு புகழ் பெற்ற பத்ரி நாத் ஆலயத்துக்கு சமீபத்தில் நதிக்கரையில் பல நூற்றுக்கணக் கான மக்களின் கண்ணீர் அஞ்ச லியுடன் மன்னரின் வயதைக் குறிக் கும் 56 பீரங்கி வேட்டுக்கள் தீர்த்து பூரண அரச மரியாதையுடன் எரியூட் டப்பட்டது. மன்னர் குடும்பக் கொலை பற்றிய உண்மை விரை வில் தெரியவரும் என்று பிரதமர் கொய்ராலா தெரிவித்தார்.

நேபாள நாட்டின் பாரம்பரி யத்துக்கேற்பவும் கால அவகாசமின் மையும் காரணமாக மன்னர் குடும்பத் தினரின் இறுதிச் சடங்குக்கு வெளி நாட்டுத் தலைவர்களை அழைக் காததால் வெளிநாட்டுத் தலைவர் எவ ரும் இறுதிச் சடங்கில் கலந்து கொள்ளவில்லை.

வெள்ளிக் கிழமை அரண் மனையில் இரவு விருந்துக்கு அரச குடும்பத்தினர் அனைவரையும் மகா ராணி ஐஸ்வர்யா அழைத்திருந்த தாகவும் இந்த நேரத்தில் மூத்த மகன் பட்டத்து இளவரசர் டிப்பேந்திராவின் திருமணம் பற்றி பேசவிருந்ததாகவும் கூறப்படுகிறது. இளவரசர் டிப்பேந்திரா முன்னாள் அமைச்சர் ஒருவரின் மகளைக் காதலித்து வருவதாகவும் இதை மகாராணி எதிர்ப்பதாகவும் இப்போது கூறப்படுகிறது. இளவரசர் டிப்பேந் திராவுக்கு வேறு பெண் பார்ப்ப தாகவும் இது பற்றி ஆலோசனை நடத்தவே இரவு விருந்துக்கு அனை வரையும் மகாராணி அழைத்திருந்த தாகவும் இதே சமயம் இப்போது 29 வயதாக உள்ள இளவரசர் டிப் பேந்திரா 35 வயது வரை திருமணம் செய்யக் கூடாதென்றும் இதற்கிடை யில் திருமணம் செய்து குழந்தை பெற்றால் மன்னர் உயிருக்கு ஆப த்து என்று அரண்மனைச் சோதி டர்கள் கூறியதாகவும் இப்போது கூறப்படுகிறது,

இந்த விருந்துக்கு இரா ணுவ உடையில் வந்த இளவரசர் டிபேந்திரா இயந்திரத் துப்பாக்கியால் மன்னரையும் மற்றவர்களையும் சுட்டுக் கொன்று விட்டு தன்னையும் சுட்டுக் கொண்டதாகத் தெரிவிக்கப் பட்டது.

**கண்ணீர் காணிக்கையுடன் நீண்ட இறுதி யாத்திரை**

அரண்மனையிலிருந்து மன்னர், மகாராணி மற்றும்இரு பிள்ளைகளின் பூதவுடல்களின் இறுதி யாத்திரை பத்ரி நாத் நோக்கிப் புறப்பட்டதும் மயானம் வரை மக்கள் ஆயிரக் கணக்கில் திரண்டு நின்று கண்ணீர் அஞ்சலியை செலுத்தினர். சுமார்பத்து லட்சம் மக்கள் வழி நெடுக நின்று கண்ணீர் மல்க தங்கள் மன்னருக்கு இறுதிப் பிரியா விடை அளித்தனர். இறுதி ஊர் வலம் மயானத்தை அடைவதற்கு எட்டு மணி நேரத்துக்கும் மேலானது.

சனிக்கிழமை காலை வரை மன்னர் குடும்பத்தினரின் கொலை பற்றி மௌனம் காத்த அரண்மனை பின்னர் சுருக்கமாக செய்தியை வெளியிட்டது.

சனிக்கிழமை இரவு பிரதமர் கொய்ராலா தேசிய ஊடகத் துறை மூலம் வெளியிட்ட செய்தி யில் இப்படுகொலைகள் பற்றி நம்ப முடியவில்லை என்றும் விரைவில் உண்மை வெளியாகி விடும் என்று நம்புவதாகவும் குறிப்பிட்டிருந்தார். இச்சம்பவத்தால் தாமும் நாடும் ஆழ்ந்த அதிர்ச்சி அடைந்துள் ளதாகத் தெரிவித்தார்.

**மக்கள் நம்பவில்லை**

கல்யாணத் தகராறு கார ணமாக மன்னர், மகாராணி மற்றும் அரச குடும்பத்தினர் பலரை இள வரசர் டிப்பேந்திரா சுட்டுக் கொன் றதாக வெளிவந்த செய்தியை நேபாள மக்கள் நம்ப மறுக்கின்றனர். இக்கொலைகளுக்கும் இளவரசர் காயமடைந்து நினைவிழந்த நிலை யில் மருத்துவ மனையில் கிடப்ப தற்கும் பின்னால் சதி இருப்பதாக மக்கள் கருதுகின்றனர்.

இம்மாதம் 9ந் திகதி கொழும்பில் நடைபெறவிருந்த சார்க் நாடுகளின் வெளிவிவகார அமைச்சர் களின் மாநாடு நேபாள மன்னரின் கொலை காரணமாக காலவரை யின்றி ஒத்தி வைக்கப்பட்டுள்ளது.



கடந்த வெள்ளியன்று கொலை செய்யப்பட்ட நேபாள மன்னர் பிரேந்திரா (வலது) மகாராணி ஐஸ்வர்யாவுடன் அரண்மனை மண்டபத்தில் இளவரசர் (இடது) டிபேந்திராவுக்கு முடிக்குரிய இளவரசர் பட்டத்தை 1990ஆம் ஆண்டில் வழங்கிய சமயத்தில் எடுத்த படம். இளவரசர் நிரஞ்சனும் இளவரசி சுருதியும் காணப்படுகின்றனர்

உலக வலம்

தொகுப்பு :- பௌஸி

# உடனடிப் போர் நிறுத்தம் அரபாத் உத்தரவு

(ஜெருசலேம்)

உடனடியான போர் நிறுத்தத்தை அமுல்படுத்துமாறு பாலஸ்தீன இயக்கத்தலைவர் யசீர் அரபாத் தமது பாதுகாப்பு படைக ளுக்கு உத்தரவிட்டிருப்பதாக பால ஸ்தீனப் பாதுகாப்புப் படையின் [illegible] யர் அ[illegible]காரி [illegible]றினார்.

இஸ்ரேலும் பலஸ்தீனமும் போர் நிறுத்தம் செய்ய வேண் டுமென்று அமெரிக்கா ஏற்கனவே இரு தரப்புக்கும் வேண்கோள் விடுத்திருந்தது. கடந்த எட்டு மாத காலப் போரில் பாலஸ்தீனியர்கள் பலர் கொல்லப்பட்டிருக்கின்றனர்.

# பணிப்பாளர், அதிபர் நிரந்தர நியமனத்துக்கான பரீட்சை

(காரைதீவு நிருபர்)

வடக்கு - கிழக்கு மாகாணத்தில் கடமையாற்றி வரும் கடமை நிறைவேற்று உதவிக்கல் விப் பணிப்பாளர்களையும், அதிபர் களையும் நிரந்தரமாக்குவதற்கான நேர்முகப்பரீட்சை வெகு விரைவில் நடைபெறவுள்ளது.

இந்த நேர்முகப்பரீட் சையை உடனடியாக நடாத்த நடவடிக்கை எடுக்குமாறு கோரும் கல்வியமைச்சர் சுசில் பிரேம ஜயந்தவின் கட்டளைக் கடிதத்தை இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்க பொதுச் செயலாளர் த.மகாசிவம் இன்று (திங்கள்) மாகாணக்கல்வி நிருவாகத்திடம் கையளிப்பார்.

நாட்டின் ஏனைய மாகா ணங்களில் பிரஸ்தாப நேர்முகப் பரீட்சை நடைபெற்று வருகிறது. ஆனால் வடக்கு கிழக்கு மாகாணத் தில் இந்நேர்முகப்பரீட்சை தாமத மடைந்து வருவதாக கல்வியமைச் சருடன் நடைபெற்ற சந்திப்பில் பொதுச் செயலாளர் த.மகாசிவம் சுட்டிக்காட்டியிருந்தார்.

மாகாண கல்வியமைச்சு மற்றும் திணைக்களத் தலைமை களின் அலட்சியப் போக்கே நேர்மு கப்பரீட்சை, நியமனம் போன்ற விட யங்கள் தாமதமடைவதற்கு காரண மென மகாசிவம் அமைச்சரிடம் குறைபட்டுக் கொண்டார்.

கல்வியமைச்சின் மேல திக செயலாளர் சிறிசேன விதா னகே உடனடியாக செயலில் இறங்கி நேர்முகப்பரீட்சைக்கான கட்டளைக்கடிதத்தை அந்த இடத் திலே கணணியமப்படுத்தி அமைச் சரின் ஒப்பத்தைப் பெற்று செயலாளர் மகாசிவத்திடம் கையளித்தமை குறிப்பிடத்தக்கது.

# ''கச்சதீவை மீட்க தமிழகம் சகல முயற்சியும் செய்யும்''

(சென்னை)

இலங்கையிடமிருந்து கச்சதீவை மீட்பதற்கான சகல நடவடிக்கைகளும் மேற்கொள்ளப் படும் என்று தமிழக மீன் வளத்துறை அமைச்சர் கே.ரி. ராஜநாயகம் நேற்று முன்தினம் நாகர்கோவில் செய்தியா ளர்களிடம் பேசும் போது தெரிவித் தார்.

கச்சதீவை மீட்பதற்கான கோரிக்கையை மத்திய அரசிடம் தமிழ் நாடு அரசு வலியுறுத்தும் என்று அமைச்சர் ராஜநாயகம் சொன் னார்.

கடலில் மீன் பிடிக்கச் செல்லும் இந்திய மீனவர்களை இலங்கைக் கடற்படை சுட்டுக் கொல்லும் பிரச்சினையும் மத்திய அரசின் கவனத்துக்கு மாநில அரசு கொண்டு செல்லுமென்று அமைச்சர் ராஜநாயகம் சொன்னார்.

# மகளிர் தினத்தில் பல வேலைத்திட்டங்கள்

(காரைதீவு நிருபர்)

காரைதீவு கிராமிய அபிவிருத்தி வாரத்தின் இறுதி நாளான மகளிர் தினத்தில் பல முன்மாதிரியான வேலைத்திட் டங்கள் ஆரம்பித்து வைக்கப்பட்டன.

விசேட கருத்திட்டத்தின் கீழ் கறவைப்பசு வளர்த்தலுக்காக ரூ.80ஆயிரம் கடனை கிராம அபிவி ருத்தித் திணைக்களம் வழங்கி வைத்தது.

காரைதீவு 8ம் பிரிவைச் சேர்ந்த 16 பேருக்கு இக்கடன் வழங்கப்பட்டது. பிரதேச செயலாளர் எஸ்.இராமகிருஷ்ணன் இதற்கான காசோலையை வழங்கி வைத்தார்.

காரைதீவு கிராம அபிவி ருத்தி அலுவலர் கே.விஜய ரெத்தினம் காரைதீவு ஸ்ரீ சித்தானைக் குட்டி ஆலய சுற்று மதில் அமைப்பு வேலைக்கும், மாளிகைக்காடு பள்ளிவாசல் மற்றும் மாவடிப்பள்ளி மதரஸா அபிவிருத்திக்காகவும் ஒரு தொகை பணத்தை அன்பளிப்பாக வழங்கி வைத்தார்.

கடந்தாண்டு தையல் டிப்ளோமா பயிற்சி நெறியைப் பூர்த்தி செய்த 30 யுவதிகளுக்கான சான்றித ழ்களை பிரதேச செயலாளர் இராம கிருஷ்ணன் வழங்கி வைத்தார்.

கட்டுரை, பேச்சு, பொருட் காட்சி போட்டிகளில் வெற்றி பெற்ற வர்களுக்கு பெறுமதியான பரிசுகள் வழங்கப்பட்டன.

காரைதீவு இ.கி.மிஷன் சாரதா சிறுமியரில்ல நூலக அபிவி ருத்திக்கும் நன்கொடை வழங்கப் பட்டது.

# குண்டுடன் கைதானவர் தடுப்புக் காவலில்

(காரைதீவு நிருபர்)

சம்மாந்துறை அல்-மர்ஜான் மகளிர் கல்லூரி முன்றலில் கடந்த வியாழனன்று கைது செய் யப்பட்ட ஏ.எல்.நபீல் என்ற முன் னாள் ஊர்காவல் படை வீரர் பயங் கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் தடுத்து வைக்கப்பட்டுள்ளார் என்று சம்மாந்துறை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி எச்.எல்.ஜமால்தீன் தெரிவித்தார்.

சந்தேக நபரான நபீல் ஜே.ஆர். வகை கிரனைட்டுடன் கைது செய்யப்பட்டமை குறிப்பி டத்தக்கது.

கடந்த புதனன்று கல்விப் பிரதியமைச்சர் ஏ.எல்.அதாவுல்லா, பாராளுமன்ற உறுப்பினர் யூ.எல்.எம். மொகைதீன் ஆகியோர் அங்கு சமூகமளிக்கவிருந்தமை குறிப்பி டத்தக்கது.

இவர்கள் வருகை தர 30 நிமிட நேரமே இருக்கையில் சந்தேக நபர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# ஜெயலலிதாவுக்கு ஆந்திரா மறுப்பு

(ஹைதராபாத்)

கிருஷ்ணா நதி நீர் ஒரு சொட்டுக் கூட நாட்டுக்குக் கிடைக்க வில்லை என்று தமிழக முதல் வராகப் பதவியேற்றுள்ள செல்வி ஜெயலலிதா தெரிவித்திருப்பது உண்மைக்குப் புறம்பானது என்று ஆந்திரப்பிரதேச பாசனத்துறை அதிகாரி ஒருவர் தெரிவித்திருக்கி றார்.

தனது கடமையை ஆந்திர அரசு நிறைவேற்றி வருகி றதென்றும் பாசனக் கால்வாய் கட்டி முடிப் பதற்கு முன்பே 1996 ஆம் ஆண்டி லிருந்து கொடுத்த நீரின் அளவு பற்றியும் விளக்கிக் கூறினார்.

# மட்டக்களப்பு இராமகிருஷ்ண மிஷன் பவள விழா ஊர்திகள் பவனி

(கல்லாறு நிருபர்)

ஸ்ரீராம கிருஷ்ண மிஷன் மாணவரில்ல பவள விழாவை முன்னிட்டு இரு முக்கிய நிகழ்வுகள் ஜூன் 7ந் திகதி நடைபெறவிருக்கிறது. அன்று காலை பிரமாண்டமான முறையில் ஆன்மீக ஊர்திகள் பேரணி ஒன்று நடைபெறவிருக்கிறது. இப்பேரணி மட்/ஆனைப்பந்தி இ.கி.மி விவேகானந்தா மகளிர் வித்தியாலயத்தில் இருந்து புறப்பட்டு கல்முனை பிரதான வீதியூடாக கல்லடி இராமகிருஷ்ண மிஷன் வளாகத்தை வந்தடையும். இவ்வலங்கார ஊர்திகள் ஊர்வலம் சிறப்பாக அமைய விழாக்குழுவின் தீவிரமாக செய்ற்பட்டு வருகின்றனர். அத்துடன் பவள விழா மலர் ஒன்று அன்றைய தினம் ஸ்ரீமத் சுவாமி சிவமயானந்தஜி மகராஜ் அவர்களால் வெளியிட்டு வைக்கப்படும். மலர் அறிமுக உரையை மலர்க்குழுத் தலைவர் ஸ்ரீமத் சுவாமி அஜராத்மானந்தாஜி மகராஜ் ஆற்றுவார். 6ந் திகதி ஆரம்பிக்கும் பவளவிழாவிற்கும் மேற்குறித்த நிகழ்வுகளிற்கும் பிரதம விருந்தினராக ஸ்ரீராம கிருஷ்ண மடம், கல்கத்தா, உதவிச் செயலாளர், ஸ்ரீமத் சுவாமி சிவமயானந்தாஜி மகராஜ் கலந்து கொள்ள விருக்கிறார்.

# வீதிகள் திருத்துவதற்கு அமைச்சர் பேரியல் நிதி

(கல்லாறு நிருபர்)

கிழக்கின் அபிவிருத்திப் புனர்வாழ்வு புனரமைப்பு மற்றும் கிராமிய வீடமைப்பு அமைச்சர் திருமதி.பேரியல் அஷ்ரப் களுவாஞ்சிக்குடி பிரதேச பிரிவிலுள்ள மகிழூர் மத்திய வீதி திருத்தத்திற்கான 6 இலட்சம் ரூபாவையும் அரிசி ஆலை வீதி வடிகாலமைப்பிற்காக 3 1/2 இலட்சம் ரூபாவையும் கலாசார மண்டபத்தின் பக்கத்தில் வடிகால் அமைப்பதற்காக 3 இலட்சம் ரூபாவும் கிழக்கு அபிவிருத்தியின் கீழ் கிராமிய அபிவிருத்திக்கான நிதியிலிருந்து ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

. மட்டக்களப்பு லொயிட்ஸ் அவெனியூ வீதி திருத்தத்திற்காக 5 இலட்சம் ரூபாவும் காத்தான்குடி ஆஸ்பத்திரி வீதி 2 கிலோமீற்றருக்கு செப்பனிட்டு தார் போடுவதற்கு 20 இலட்சம் ரூபாவும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இவ்வேலைகளைச் செய்வதற்கான முகவராக வடக்கு கிழக்கு மாகாண சபை மட்டக்களப்பு வீதி அபிவிருத்தி திணைக்களம் நியமிக்கப்பட்டுள்ளது. இதற்கான மதிப்பீடுகளை திணைக்களம் மேற்கொண்டு வருகிறது.

# பட்டதாரிகள் கவன ஈர்ப்புப் போராட்டம்

(காத்தான்குடி நிருபர்)

மட்டக்களப்பு மாவட்ட வேலையற்ற பட்டதாரிகள் சங்கத்தினர் சென்ற வாரம் 15 நாட்களுக்குள் இரண்டாவது கவனயீர்ப்பு போராட்டத்தினை நடாத்தினர்.

மட்டக்களப்பு மகாத்மா காந்தி சதுக்கத்தில் கூடிய 300க்கும் அதிகமான வேலையற்ற பட்டதாரிகள் காலை 10 மணி முதல், 11 மணி வரை போராட்டத்திலீடுபட்டனர்.

போராட்டத்தின் முடிவில் ஈ.பி.டி.பி அலுவலகத்திற்குச் சென்று வேலையற்ற பட்டதாரிகளின் பெயர்ப்பட்டியலை அமைச்சரும் ஈ.பி.டி.பி தலைவருமான டக்ளஸ் தேவானந்தாவிற்கு அனுப்புவதற்காக கையளித்தனர்.

விரைவில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவைச் சந்தித்து பேச்சு நடாத்தவுள்ளதாக ஒன்றியத் தலைவர் என்.ரமேஷ்வரன் தெரிவித்தார்.

# அலிகார் பாடசாலையில் ''லீடர் அஷ்ரப்'' மண்டபம்

(ஓட்டமாவடி நிருபர்)

மட்/ அலிகார் தேசிய பாடசாலையில் பாராளுமன்ற உறுப்பினர் பசீர் சேகுதாவூத் முயற்சியினால் பல இலட்சம் ரூபாய் செலவில் "லீடர் அஷ்ரப்" ஞாபகார்த்த மண்டபம் அமைக்கப்பட்டு வருகிறது.

இதன் முதற் கட்ட நிர்மாண வேலைகளுக்கு 18இலட்சம் ரூபாய்" ஒதுக்கப்பட்டு இதற்கான வேலைகள் யாவும் பூர்த்தியான நிலையில் இரண்டாம் கட்ட நிர்மாணப் பணிக்காக 30 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

பாராளுமன்ற உறுப்பினர் பசீர் சேகு தாவூத் இந் ஞாபகார்த்த மண்டபத்தின் இரண்டாம் கட்ட வேலைகளை பூர்ததி செய்வது பற்றி வடக்கு கிழக்கு புனர்வாழ்வு புனரமைப்பு கிராமிய வீடமைப்பு அமைச்சர் பேரியல் அஷ்ரப்பின் கவனத்திற்கு கொண்டு வந்ததுக் கிணங்க இந்நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

# ஆயுள்வேத வைத்திய பாதுகாப்புச் சபை தெரிவு

(கல்லாறு நிருபர்)

மண்முனை வடக்கு சித்த ஆயுள் வேத வைத்திய பாதுகாப்புச்சபையின் புதிய நிர்வாகிகள் தெரிவு அண்மையில் பிரதேச செயலாளர் கே.கதிர்காமநாதன் தலைமையில் இடம் பெற்றது.

தலைவராக ஏகமனதாக மூன்றாவது தடவையாகவும் வைத்தியர் க.நடராஜா தெரிவு செய்யப்பட்டுள்ளார். செயலாளராக வைத்தியர் எஸ்.சுதர்சனும், பொருளாளராக வைத்தியர் வே.அருணோதயமும் தெரிவு செய்யப்பட்டனர். உப தலைவர்களாக வை.க.விநாயகமூர்த்தியும் ,எம்.பி.எச்.ஆதம்லெவ்வையும் பிரதிச் செயலாளராக வைத்தியர் எஸ்.கே. தங்கையாவும், கணக்காளராக எஸ்.கிருஷ்ண பிள்ளையும் தெரிவு செய்யப்பட்டனர்.

அத்துடன் 5 பேர் கொண்ட நிர்வாக சபை அங்கத்தவர்களாக திருமதி.எம்.சுசிலாதேவி, திருமதி.ஜெயமலர், கே.கனகநாயகம். என்.முகைதீன் பாபா ,எஸ்.சண்முகம் பிள்ளை ஆகியோர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

# அளுத்கம கல்விக்கல்லூரி 6ம் திகதி ஆரம்பம்

(முபா)

அளுத்கமவில் புதிதாக ஆரம்பிக்கப்பட்டுள்ள கல்விக் கல்லூரியில் மாணவர்கள் இம்மாதம் 6ம் திகதி அனுமதிக்கப்படவுள்ளனர். மொத்தம் ஐந்து நெறிகளில் 70 மாணவர்கள் இங்கு அனுமதிக்கப்படுவர். இவர்களுக்கான கடிதங்கள் தற்போது அனுப்பப்பட்டுள்ளன. ஆரம்ப நெறி, மனையியல், பொருளியல், சமூகக்கல்வி, தமிழ், உடற்கல்வி ஆகிய நெறிகள் இங்கு ஆரம்பிக்கப்படவிருப்பது குறிப்பிடத்தக்கது.

மேற்படிக் கல்விக்கல்லூரியின் பீடாதிபதியாக எம்.எப். நூருல் ஹாரிஜா நியமிக்கப்பட்டுள்ளார்.

# கிராமிய தொழிற்பயிற்சி நிலையம் மருதமுனையில் அமைக்க கோரிக்கை

(மருதமுனை நிருபர் எம்.ஐ.எம்.வலீத்)

கரைவாகு வடக்கு தமிழ் பேசும் மக்களின் நலன் கருதி இலங்கை தொழிற்பயிற்சி அதிகார சபையின் கீழ் செயற்பட்டு வரும் கிராமியத் தொழிற்பயிற்சி நிலையம் ஒன்றினை மருதமுனையில் அமைத்துத் தருமாறு மருதமுனை கல்வி, சமூக அபிவிருத்தி நிறுவனம் (மெஸ்டோ) தொழில் நுட்ப, கிராமியத் தொழிற்பயிற்சி அமைச்சர் அமரசிறி தொடங்கொடவிடம் கோரிக்கை விடுத்துள்ளது.

மெஸ்டோ அமைப்பின் தவிசாளர் முஸத்திக் ஸே.முகம்மத், பொதுச் செயலாளர் எஸ்.எல். அன்வர்கான் ஆகியோர் கையெழுத்திட்டு அமைச்சருக்கு அனுப்பி வைத்துள்ள மகஜரில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது,

இலங்கை தொழிற்பயிற்சி அதிகார சபையின் கீழ் செயற்பட்டு வரும் கிராமிய தொழிற்பயிற்சி நிலையங்கள் அம்பாறை மாவட்டத்தின் அநேக பிரதேசங்களில் அமைக்கப்பட்டு சிறப்பாக செயற்பட்டு வருகின்றன. 40 ஆயிரத்திற்கும் மேற்பட்ட சனத்தொகையினைக் கொண்ட கல்முனை வடக்கு பிரதேசம் இதில் புறக்கணிக்கப்பட்டுள்ளதானது மிகவும் வேதனைக்குரிய விடயமாகும்.

இளைஞர் யுவதிகள் இப்பயிற்சிகளைப் பெற்றுக் கொள்வதன் மூலம் தங்களது அறிவையும் ஆளுமையையும் மேலும் வளர்த்துக் கொள்வதற்கும் உதவி புரியும் என எதிர்பார்க்கிறோம்.

இவைகளை கவனத்தில் கொண்டு இப்பிரதேச இளைஞர் யுவதிகளின் நீண்ட நாள் எதிர்பார்ப்பான கிராமிய தொழிற்பயிற்சி நிலையம் ஒன்றினை மருதமுனையில் அமைத்துத் தரும்படி இதில் கோரியுள்ளார்.

# 18 வருடங்களாக பயனற்றுக் கிடக்கும் சிங்கள மகாவித்தியாலயக் கட்டிடம்

(காத்தான்குடி நிருபர்)

மட்டக்களப்பு பெரிய உப்போடையில் அமைந்துள்ள சிங்கள மகாவித்தியாலயம் கடந்த 18 வருடங்களுக்கும் மேலாக செயற்படாத நிலையில் சீரழிந்து வருகிறது.

ஒரு மாடிக் கட்டிடத் தொகுதியையும் 6 தனிக் கட்டிடங்களையும், விளையாட்டு மைதானம், கிணறு உட்பட பலவசதிகளைக் கொண்ட இப்பாடசாலை இயங்காது பாழடைந்த நிலையில் காணப்படுவதால் தவறான நடத்தைகளுக்கும் இக்கட்டிடங்கள் பாவிக்கப்பட்டு வருவதாக அப்பகுதி வாசிகள் தெிவிக்கின்றனர்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் பல கல்விக் கூடங்களும், உயர் கல்விக் கூடங்களும், உயர் கல்விப்பீடங்களும் இடவசதியின்மையால் அல்லறும் போது இவ்வாறு பல கட்டிடங்கள் பாழ டைந்த நிலையில் காணப்படுவது குறித்து கல்வியாளர்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

மட்டக்களப்பு தேசிய கல்விக் கல்லூரியில் இடவசதியின்மையால் விரிவுரைகள் கொட்டில்களில் நடைபெறுவது குறிப்பிடத்தக்கது,

# காத்தான்குடியில் புகைத்தல் எதிர்ப்பு தினம்

(காத்தான் குடி நிருபர்)

சர்வதேச புகைத்தல் எதிர்ப்பு தினத்தை ஒட்டி மட்டக்களப்பு மாவட்டத்தில் பல்வேறு நிகழ்ச்சிகள் இடம் பெற்றன.

காத்தான்குடி இல்மா சமுர்த்தி செயலணி ஏற்பாடு செய்திருந்த மாபெரும் புகைத்தல் எதிர்ப்பு பாத யாத்திரை கடற்கரைவீதி சுமநல கேந்திர நிலையத்திற்கு முன்னாலிருந்து ஆரம்பமாகியது. பெருந்தொகையான பாலர் பாடசாலை மாணவர்கள் இப்பாத யாத்திரையில் கலந்து கொண்டனர்.

இல்மா சமுர்த்தி செயலணி அபிவிருத்திச் செயலாளர் எம்.எஸ்.எம். அப்துல்லாஹ் தலைமையில் நடை பெற்ற இப்பேரணியில் பெருந்தொகையா னோர் கலந்து கொண்டனர். வீடுகளுக்கு சென்று புகைத்தல் எதிர்ப்புப் பிரசாரங்களும் இடம் பெற்றன.


## அகில இலங்கை இந்து மாமன்றம்



### சுவாமி விபுலானந்தர் நினைவுகட்டுரைப்போட்டி

அகில இலங்கை இந்து மாமன்றம் பாடசாலை மாணவர்களிடையே சுவாமி விபுலானந்தர் நினைவு தினத்தையொட்டி கட்டுரைப்போட்டியை நடாத்துகின்றது. யூலை 19ம் திகதி சுவாமி விபுலானந்தர் நினைவு தினமாகும்.

**கீழ்ப்பிரிவு (ஆண்டு 6-9 வரை) மாணவர்கள்**

''சுவாமி விபுலானந்த அடிகளாரை என்றும் போற்றுவோம்''

**எனும் தலைப்பில் 750 சொற்களுக்கு மேற்படாமலும்,**

**மேற்பிரிவு (ஆண்டு 10-13 வரை) மாணவர்கள்:-**

''இந்து பண்பாட்டு வளர்ச்சியில் சுவாமி விபுலானந்த அடிகளாரின் பங்கு''

**எனும் தலைப்பில் 2000 சொற்களுக்கு மேற்படாமலும் கட்டுரைகளை எழுதி, தங்களது பாடசாலை அதிபர்களினால் அத்தாட்சிப்படுத்தி அனுப்ப வேண்டும். தாங்கள் கல்வி பயிலும் தரத்தையும் தவறாது குறிப்பிடல் வேண்டும்.**

சகல கட்டுரைகளும் 2001-06-30ம் திகதிக்கு முன் கிடைக்கக்கூடியதாக,

அகில இலங்கை இந்து மாமன்றம்
இல.91/5. சேர் சிற்றம்பலம் ஏ கார்டினர் மாவத்தை .
கொழும்பு - 02

**எனும் முகவரிக்கு பதிவுத்தபால் மூலம் அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.**

**ஒவ்வொரு பிரிவிலும் சிறந்த கட்டுரைக்கு முதற்பரிசு ரூபா 2000 வழங்கப்படுவதுடன், பரிசுக்குரிய கட்டுரை அடுத்த "இந்து ஒளி" சஞ்சிகையிலும் பிரசுரிக்கப்படும். 2ம்,3ம் இடங்களையும் மற்றும் பாராட்டுப்பெறும் கட்டுரைகளுக்கும் பரிசில்களும், சான்றிதழ்களும் வழங்கப்பெறும்.**

**பொதுச்செயலாளர்**
**அகில இலங்கை இந்து மாமன்றம்**

**தொலைபேசி:- 434990**
**தொலைநகல்:- 344720**

## அன்புள்ள அம்மா

"பத்து மாதங்கள் சுமந்திருந்து
என்னைப் பெற்ற
என் அன்னை
என்
உயிரை விடவும்
அன்பிற்குரியவர்!
அவர் என் கண் எதிரிலேயே
கொழுந்து விட்டெரியும்
நரக நெருப்பில் வீழ்ந்து
வேதனைப் படுவதைக்
காண நான்
ஒருபோதும் சகிக்க மாட்டேன்
அந்த
பயங்கர வேதனையிலிருந்து
என் அன்பே உருவான
அன்னையை
மீட்டெடுப்பது தான்
என் ஒரே எண்ணம்!"

**சி. சுஜாத்**
**ஆண்டு - 9K**
**சிவானந்தா வித்தியாலயம்**
**தேசிய பாடசாலை**
**கல்லடி உப்போடை**
**மட்டக்களப்பு**

## மரம்

மனிதனுக்கு மரம் இன்றியமையாதது.

மரம் எமக்கு உணவு, உடை, உறையுள் ஆகியவற்றைத் தருகிறது. மரத்தை அழிப்பதால் தீங்கு விளைகிறது. மரத்தை அழிப்பதால் தூயவெளி கிடைப்பதில்லை. மரத்தினால் மரத்தளபாடங்களை பெற்றுக்கொள்ளலாம். மரம் வளர்வதால் மண்ணரிப்பை தடுக்கலாம். மண் சரிவையும் தடுக்கலாம். மரம் மனிதனுக்கு மட்டுமல்லாமல் விலங்குகளுக்கும், தாவரங்களுக்கும் நன்மையையே தருகிறது. பறவை, விலங்குகளுக்கும் உணவாகவும் உறைவிடமாகவும் அமைகிறது. மரங்களை அழிப்பதனால் நாம் வாழும் தேசம் பாலைவனமாகக் காட்சியளிக்கும். எனவே மரங்களை வளர்போம். பயன்பெறுவோம், அழகு காண்போம்.

**கபிலன். செந்தூரன்**

# அன்பிற்கும் எல்லை உண்டோ

## சிறுவர் கதை

கிரேக்க நாட்டு அடிமை ஒருவன் எப்படியோ தப்பித்துக் காட்டுக்குள் ஓடி விட்டான்.

இதை அறிந்த அரசன் கோபம் கெண்டான். 'எங்கிருந்தாலும் அவனைக் கண்டு பிடித்து இழுத்து வாருங்கள்' என்று வீரர்களுக்கு கட்டளை இட்டான்.

வீரர்கள் அவனைத் தேடி அலைந்தார்கள்.

காட்டில் திரிந்த அந்த அடிமையின் செவிகளில் சிங்கத்தின் முனகல் ஒலி கேட்டது. முனகல் வந்த திசையை நோக்கி நடந்தான்.

அங்கே சிங்கத்தின் காலில் பெரிய முள் குத்தியிருந்தது. வலி தாங்க முடியாமல் முனகிக் கொண்டிருந்தது.

அதன் அருகே சென்ற அவன் அதை அன்பாகத் தடவிக் கொடுத்தான். அது தன் காலை அவனிடம் காட்டியது. அவனும் மெதுவாக அந்த முள்ளை வெளியே எடுத்தான். அந்தக் காயத்திற்குக் கட்டுப்போட்டான். பிறகு தன் வழியே சென்றான்.

சில மாதங்கள் சென்றன. அவனை வீரர்கள் கண்டு பிடித்துக் கைது செய்தனர்.

தன் முன் இழுத்து வரப்பட்ட அவனைக் கோபத்துடன் பார்த்தான் அரசன்.

'இவனுக்குத் தரும் தண்டனை தப்பிக்க நினைக்கும் அடிமைகளுக்கு ஒரு பாடமாக அமையவேண்டும். பசியுடன் இருக்கும் சிங்கத்துக்கு இவன் உண்வாவதை நாம் எல்லோரும் பார்ப்போம்.' என்றான்.

மறுநாள் அடிமையைச் சிங்கம் அடித்து உண்பதைக் காண அங்கு ஏராளமான மக்கள் கூடியிருந்தனர்.

சிங்கத்தின் கூண்டு திறக்கப்பட்டது. பசியால் வாடிக் கொண்டிருந்த சிங்கம் அவனை நோக்கி ஒரே பாய்ச்சலாகப் பாய்ந்து வந்தது. இன்றோடு தொலைந்தோம் என்று அஞ்சிய அவன் தன் கண்களை மூடிக் கொண்டான்.

எதுவுமே நடவாததை அறிந்த அவன் கண்களைத் திறந்து பார்த்தான். அந்தச் சிங்கம் அவன் காலடியில் படுத்து இருந்தது.

"தான் காட்டில் காப்பாற்றிய சிங்கமே அது" என்பதை அறிந்தான் அவன். அதை அன்பாகத் தடவிக் கொடுத்தான்.

நடந்ததைப் பார்த்த அரசன் வியப்பு அடைந்தான். சிங்கம் மீண்டும் கூட்டுக்குள் அனுப்பப்பட்டது.

அவனை அழைத்த அரசன் 'ஏன் அந்தச் சிங்கம் உன்னைக் கொல்லவில்லையா? என்று கேட்டான்.

காட்டில் நடந்ததை விளக்கமாகச் சொன்னான் அவன்.


இதைக் கேட்ட அரசன் 'உன்னால் நான் அன்பின் பெருமையைத் தெரிந்து கொண்டேன். உன் அன்புள்ளத்திற்கு நான் தரும் பரிசு இன்று முதல் நீ விடுதலை பெற்ற மனிதன். உன் விருப்பம் போல நீ எங்கு வேண்டுமானாலும் செல்லலாம். நீயே அந்தச் சிங்கத்தை அழைத்துச் சென்று காட்டில் விட்டு விடு' என்றான். ○○○○




# ஒருவரிச் செய்திகள்

- விண்வெளிக்கு முதன் முதலில் சென்ற பெண் நாயின் பெயர்-லைகா
- முதன் முதலில் அதிர்ஷ்ட இலாபச் சீட்டை அறிமுகப்படுத்தியவர்கள் -றோமானியர்கள்
- உலகிலேயே அதிக இரத்த தானம் செய்தவர்கள் - சீனர்கள்
- சராசரி மனிதனுடைய இதயம் 340 கிராம் நிறை உடையது.
- உலகிலேயே உள்ள 44 ஏழை நாடுகளில் 33 நாடுகள் ஆபிரிக்காவிலேயே உள்ளன.
- உலகிலேயே மிகவும் குறைவாக் வரி விதிக்கும் நாடு - ஜப்பான்
- எஸ்கிமோக்கள் குடியிருக்கும் வீட்டின் பெயர் - லீக்லூ
- உலகிலேயே எந்தவொரு நாட்டுடனும் போரிடாத நாடு - சுவிற்சர்லாந்து
- உலகிலேயே அதிகமான வருமானவரி செலுத்துபவர்கள் - நோர்வே நாட்டு மக்கள்
- உலக மக்கள் தொகையின் 4 வீதம் பேர் இடது கையால் எழுதுபவர்களாவர்.
- ஆண், பெண் இரு பாலாரும் சேர்ந்து படிக்கும் பள்ளிக்கூடங்கள் முதன் முதலில் லண்டனில் தொடங்கப்பட்டது.
- முதலைகளுக்கு வாழ்நாளில் எத்தனை தடவைகள் பல் விழுந்தாலும் மறுபடி முளைத்துவிடும்.
- ஆமைகளுக்கு பற்கள் கிடையாது.
- நுளம்புகளுக்கு 47 பற்கள் உள்ளன.

**பா. ஜெகதீஸனன்**
**தரம் - 8k**
**மட் / பட்டிருப்பு மத்திய**
**மகா வித்தியாலயம்**



**தி. சுகந்தன்**
**தரம் - 8**
**மட் / பட்டிருப்பு மத்திய மகா வித்தியாலயம்**
**களுவாஞ்சிகுடி.**

## நிறம் தீட்டுங்கள்



இங்குள்ள படத்திற்கு நிறம் தீட்டி அனுப்புங்கள் பார்ப்போம். சிறந்த முறையில் வர்ணம் தீட்டுபவருக்கு 25 ரூபாய் பரிசு வழங்கப்படும். மேலும் பலரின் பெயர் வெளியிடப்படும். பரிசுக்காகத் தெரிவு செய்யப்படுபவர் தனது பரிசை காரியாலயத்தில் வந்து பெற்றுக் கொள்ளவும். அனுப்பவேண்டிய முகவரி:-

**நிறம் தீட்டுங்கள்-02**
**இளஞ்சிட்டுக்கள்**
**தினக்கதிர்**
**த.பெ.எண்:- 06**
**மட்டக்களப்பு.**

கடந்த வாரம் கொடுக்கப்பட்ட படத்திற்கு சிறந்த முறையில் நிறம் தீட்டி பரிசு பெறுபவர்.

**சனுக்ஷனா ராஜநாதன்**
**ஆண்டு - 01**
**வின்சன் மகளீர்**
**உயர்தரப் பாடசாலை**
**மட்டக்களப்பு.**

### பாராட்டுக்குரியவர்கள்

**சி. சிவசங்கர்**
**ஆண்டு - 9M**
**மட் / விபுலானந்த வித்தியாலயம்**
**கருவேப்பங்கேணி**
**மட்டக்களப்பு.**

**எம். ஜே. ஏ. றிபாத்**
**ஆண்டு - 01**
**மட் / ஹிழ்றியா வித்தியாலயம்**
**காத்தான்குடி.**

**செல்வன். தி. விනுஷன்**
**இல. 20,**
**திருக்குறிப்பு தொண்டர் வீதி**
**மட்டக்களப்பு.**

# சூரியனை வட்டமிடும் சாதுவான கோள்கள்

சூரியனைச் சுற்றி ஒன்பது கோள்கள் உள்ளன. அவை குறிப்பிட்ட கால வட்டங்களில் சூரியனைச் சுற்றி வருகின்றன. இந்த ஒன்பது கோள்களைத் தவிர பல்லாயிரக் கணக்கான சிறு கோள்களும் சூரியக் குடும்பத்தில் உள்ளன.

17ம் நூற்றாண்டு வரை சூரியனைச் சுற்றி புதன், வெள்ளி, பூமி, செவ்வாய், வியாழன், சனி என்ற ஆறு கோள்கள் மட்டுமே இருந்ததாகக் கருதப்பட்டது. 17ம் நூற்றாண்டின் தொடக்கத்தில் தான் யுரேனஸ், நெப்டியூன், புளுட்டோ ஆகிய மூன்று கடைசிக் கோள்களும் சூரியனைச் சுற்றி வருகின்றன என்று கண்டுபிடிக்கப்பட்டது.

**சூரியன்:-** ஒளிக்குடும்பதின் தந்தை. இது பூமியிலிருந்து 44.9 கோடி கிலோமீற்றர் தூரத்தில் உள்ளது. தன்னைத் தானே ஒரு முறை சுற்றிக் கொள்ள 26 நாட்கள் 9 மணி 7 நிமிடங்கள் எடுத்துக் கொள்கின்றது. சூரியனின் விட்டம் 13.92 இலட்சம் கிலோ மீட்டர் ஆகும். சூரிய ஒளி பூமியை 8 நிமிடங்களில் வந்தடைகிறது.

**சந்திரன்:-** பூமியைச் சுற்றி வரும் சந்திரன் பூமியிலிருந்து 3.844 இலட்சம் கிலோமீற்றர் தூரத்திலுள்ளது. இதன் விட்டழ் 3476 கிலோமீற்றர் ஆகும். பூமியையும் தன்னையும் ஒருமுறை சுற்றிக்கொள்ள ஆகும் நேரம் 22 நாட்களாகும்.

**பூமி:-** பூமியின் மொத்தப்பரப்பளவு 196950000 சதுர மைல்களாகும். நிலப்பரப்பு 57510000 சதுர மைல்களாகும். நீர்ப்பரப்பு 139440000சதுர மைல்கள். சுற்றளவு 24881 மைல்கள். விட்டம் 7926677 மைல்கள் ஆகும். பூமி தன்னைத் தானே சுற்றிவர எடுக்கும் நேரம் 23மணி நேரம் 56 நிமிடம் 4.90 செக்கண்டுகளாகும். பூமி சூரியனைச் சுற்றி வர ஆகும் காலம் 365 1/4 நாள் ஆகும்.

**புதன்:-** கிரகங்களுள் மிகச் சிறியது சூரியனுக்கு மிக அருகிலுள்ளது. இதன் விட்டம் 4878 கிலோ மீற்றர் ஆகும். தன்னைத் தானே ஒரு முறை சுற்றிக்கொள்ள எடுக்கும் காலம் 59 நாட்கள் 15 மணியாகும்.

**சுக்கிரன்:-** இதன் விட்டம் 12200 கிலோமீற்றர். சூரியனைச் சுற்றிக் கொள்ள 24 நாட்களாகும். தன்னைத்தானே ஒருமுறை சுற்றிக் கொள்ள 243 நாட்களாகும். இது அதிக ஒளியுள்ள கிரகம். பூமியை விடச் சிறியது. சூரியனை வலாகச் சுற்றிவரும் ஒரே கிரகம் இது தான்.

**செவ்வாய்:-** பூமிக்கு மிக அருகில் உள்ளது. இதன் விட்டம் 6.793 கிலோமீற்றர் ஆகும். சூரியனைச் சுற்றி வர 637 நாள்களாகின்றன. இது தன்னைத் தானே ஒரு முறை சுற்றிக் கொள்ள 24 மணி நேரமாகும்.

**வியாழன்:-** ஒன்பது கிரகங்களுள் மிகப் பெரிய கிரகம் இது தான். இதன் விட்டம். 1.43 இலட்சம் கிலோமீற்றர் ஆகும். ஒரு முறை சூரியனைச் சற்றிவர 12 வருடங்களாகும். இது தன்னைத்தானே ஒரு முறை சுற்றிவர 9 மணி 50 நிமிடம் ஆகிறது.

**சனி:-** இரண்டாவது பெரிய கிரகம் இது சூரியனை ஒரு முறை சுற்றி வர 30 ஆண்டுகளாகும். தன்னைத் தானே ஒரு முறை சுற்றிக்கொள்ள 10 மணி 45 நிமிடங்களாகும். இதன் விட்டம் 12000 கிலோ மீற்றர் ஆகும்.

**யுரேனஸ்:-** இதன் விட்டம் 608000 கிலோ மீற்றர். தன்னைத் தானே ஒரு முறை சுற்றிக் கொள்ள 10 மணி 49 நிமிடமாகும். சூரியனைச் சுற்றிவர 84 வருடங்கள் ஆகும்.

**நெப்தியூன்:-** இதன் விட்டம் 486 ஆயிரம் கிலோ மீற்றர் ஆகும். ஒரு முறை சூரியனைச் சுற்றி வர 165 ஆண்டுகளாகும். தன்னைத்தானே ஒரு முறை சுற்றிக்கொள்ள 15 மணி 48 நிமிடங்களாகும்.

**புளுட்டோ:-** இதன் விட்டம் 5.5 ஆயிரம் கிலோ மீற்றராகும். தன்னைத்தானே ஒருமுறை சுற்றிக் கொள்ள 6 நாள்கள் 9 மணியாகும். சூரியனை ஒரு முறை சுற்றி வர 247.7 வருடங்களாகும்.

**அரிய-ரதாட்சன்**

## கண்டு பிடிப்புக்களும - கண்டுபிடித்தவர்களும்

| | |
|---|---|
| ஆகாய விமானம் | - ரைட் சகோதரர்கள் (அமெரிக்கா) |
| சைக்கிள் | - மெக்மில்லன் (ஸ்கொட்லாந்து) |
| டீசல் என்ஜின் | - டீசல் (ஜேர்மன்) |
| டைனமோ | - பரடே (இங்கிலாந்து) |
| ரெலஸ்கோப் | - கலிலியோ (இத்தாலி) |
| வயர்லெஸ் | - மார்க்கோணி (இத்தாலி) |
| தடுப்பூசி | - எட்வட் ஜென்னர் |
| மின்குமிழ் | - தோமஸ் அல்வா எடிசன் (அமெரிக்கா) |
| புகைப்படச்சுருள் | - ஈஸ்ட்மென் (அமெரிக்கா) |
| மின்கலம் | - வோல்டா |

**செல்வன் பா. பகிரதன்**
**தரம்:- 8**
**மட் / தாழங்குடா**
**ஸ்ரீ விநாயகர் வித்தியாலயம்.**

## உலக நாடுகளின் தேசியப் பறவைகள்

| | |
|---|---|
| 1. இலங்கை | - காட்டுக்கோழி |
| 2. டென்மார்க் | - வானம்பாடி |
| 3. பர்மா | - பெண்மயில் |
| 4. கனடா | - வாத்து |
| 5. கொலம்பியா | - பருந்து |
| 6. அமெரிக்கா | - கழுகு |
| 7. ஜேர்மனி | - வெள்ளைக்கொக்கு |
| 8. இங்கிலாந்து | - றொபின் |
| 9. தென் ஆபிரிக்கா | - நீலக்கொக்கு |
| 10. இந்தியா | - ஆண்மயில் |

**செ. யுவராசா**
**தரம் - 8ச**
**மட் / பட்டிருப்பு மத்திய**
**மகா வித்தியாலயம்**
**களுவாஞ்சிகுடி.**




# இலங்கை உதைபந்தாட்ட வரலாற்றில் மறக்க முடியாத வீரர்

## லயனல்பீரிஸ்

(முபா)

1972ம வருடம் ஆசிய உதைபந்தாட்ட சம்பியன் போட்டிக்கான இலங்கை, பர்மா அணிகளுக்கிடையே உதைபந்தாட்டப் போட்டி ஒன்று பர்மா தேசிய விளையாட்ட ரங்கில் இடம் பெற்றது. இப்போட்டியில் பர்மா ரசிகர்களால் மிகவும் விரும்பப்பட்ட ஒருவராக இலங்கை அணியின் கோல்காப்பாளர் லயனல் பீரிஸ் திகழ்ந்தார். நம்பமுடியாத பல அற்புதங்களை அவர் அன்றைய போட்டியில் செய்து பல கோல்களை தடுத்து அனைத்து ரசிகர்களினதும் அபிமானத்தைப் பெற்றுக்கொண்டார்.

லயனல் பீரிஸ் இலங்கையின் சிறந்த கோல்காப்பாளர்களில் ஒருவர். போட்டி முடிந்து அடுத்த நாள் பர்மா தினசரிகள் அவரின் திறமையைப் பாராட்டி செய்திகள் வெளியிட்டன. உலகப்புகழ் பெற்ற இலங்கை கோல் காப்பாளர் ஹசீம் தீனுக்குப் பிறகு சிறந்த ஒரு கோல் காப்பாளராகத் திகழ்ந்தவர் லயனல்பீரிஸ். 1959ல் சவுண்டர்ஸ் கழகத்தில் விளையாடியவர். 1980ம் ஆண்டுவரை இவர் அக் கழகத்துக்காக தொடர்ந்து விளையாடியுள்ளார். தற்போது இலங்கை உதைபந்தாட்ட சங்க இளைஞர் உதைபந்தாட்ட நிகழ்ச்சித் திட்ட இணைப்பாளராக கடமையாற்றுகின்றார்.

1953ல் ரஷ்ய உதைபந்தாட்ட அணிக்கெதிராக ஹசீம்தீன் காட்டிய திறமையைக் கண்ட லயனல்பீரிஸ் ஹசீம்தீனைப் போல தானும் ஒரு காலத்தில் சிறந்த கோல் காப்பாளராக வரவேண்டும் என ஆசைப்பட்டார். ஹசீம்தீனை தனது நாயகனாக ஏற்று பல வருடங்கள் உழைத்தார். சவுண்டர்ஸ் கழகத்தில் 20 வருடங்களுக்கு மேல் தொடர்ந்து விளையாடிய ஒருவர் லயனல்பீரிஸ் எனலாம். 18 வருடங்கள் இலங்கை அணியில் இடம் பெற்று விளையாடினார். 1962ல் ஜேர்மனக்கு எதிராக விளையாடிய போட்டியை தன்னால் மறக்க முடியவில்லை என அவர் கூறுவார். இப்போட்டியில் இலங்கை 13-2 கோல்களால் தோல்வியடைந்தபோதும் ஜேர்மன் பயிற்சியாளர் கிறமர் அவர்களின் பார்வையில் இரண்டு இலங்கை வீரர்கள் இடம் பிடித்துக்கொண்டனர். பி.டி.சிறினே, லயனல்பீரிஸ் ஆகிய இருவரும் உலக மட்டத்துக்கு மதிப்பிடக்கூடியவர்கள் என கிறமர் கூறினார்.

கோல் காப்பாளருக்கு நேரம் சமநிலை, நுட்பங்கள் மிகவும் முக்கியமாகும். இன்று உதைபந்தாட்டத்தரம் குறைந்துகொண்டே போகின்றது. தனிப்பட்ட ரீதியில் வீரர்களிடம் நுட்பத்திறமை குறைந்து காணப்படுகின்றது. தற்போதைய வீரர்களிடம் உடற் தகமை கூட குறைவாகவே காணப்படுகின்றன என லயனல்பீரிஸ் கூறினார்.

இலங்கை உதைபந்தாட்ட வரலாற்றில் மறக்க முடியாத ஒருவர் லயனல்பீரிஸ் என்றால் மிகையாகாது.




மத்திய மாகாண உடற்பயிற்சி ஆணழகன் போட்டியில் இடமிருந்து வலமாக ...த்தில் மட்டக்களப்பு கிசோன்குமார் இரண்டாமிடம் பெற்ற காட்சி.
(படமும் தகவலும் :- ச.பிரகாஸ்)

# கல்முனை கல்வி மாவட்ட விளையாட்டுப் போட்டி

(...திவு நிருபர்)

கல்முனைக் கல்வி மாவட்ட பாடசாலைகளுக்கிடையிலான மாவட்டமட்ட விளையாட்டுப் போட்டி வியாழன் அன்று சம்மாந்துறை முஸ்லிம் மத்திய கல்லூரி விளையாட்டு மைதானத்தில் நடைபெற்றது.

சம்மாந்துறை வலயக் கல்விப் பணிப்பாளர் ஐ.எம்.இஸ்ஸதீன் தலைமையில் கோலாகலமாக நடைபெற்ற இவ்விழாவில் பிரதம அதிதியாகப் பிரதிக் கல்விப்பணிப்பாளர் ஏ.எல்.அதாவுல்லா கலந்து சிறப்பித்தார்.

பாராளுமன்ற உறுப்பினர்களான யூ.எல்.எம்.மொகைதீன், எம்.ஏ.அப்துல் மஜீத், றிஸ்வி சின்னலெவ்வை ஆகியோர் சிறப்பதிதிகளாகக் கலந்து சிறப்பித்தனர்.

அக்கரைப்பற்று வலயக் கல்விப் பணிப்பாளர் அல்.ஹாஜ் எம்.ரீ.ஏ.தௌபீக், கல்முனைக்கான கல்விப்பணிப்பாளர் எம்.ஏ.அப்துல் மஜீத் ஆகியோரும் சமூகமளித்திருந்தனர்.

முன்னதாக அதிதிகள் யாவரும் பாண்ட் வாத்தியங்கள், கரகாட்டம், கோலாட்டம் சகிதம் அழைத்து வரப்பட்டனர். உடற்கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர் கே.செல்லத்துரை போட்டியின் செயலாளராகப் பணியாற்றினார்.

அணி நடைப்போட்டியில் ஆண்கள் பிரிவில் காரைதீவு சண்முகா வித்தியாலயமும், பெண்கள் பிரிவில் ஆலையடிவேம்பு இராமகிருஷ்ணா கல்லூரியும் தெரிவானது. பொதுவாக கல்முனை, அக்கரைப்பற்று, சம்மாந்துறை வலயங்கள் முறையே 1ம், 2ம், 3ம் இடங்களைப் பெற்றது.

# விளையாட்டுக் கழக அலுவலகத் திறப்புவிழா

(கல்முனை ...ரபாத்)

கல்முனை பிரலியன்ட் விளையாட்டுக் கழகத்தின் பிரதான அலுவலகத் திறப்புவிழா எதிர்வரும் 05.06.2001ந் திகதி "பிரதான வீதி பழைய பஸ் நிலைய்ம் கல்முனை" என்னும் முகவரியில் மிகக் கோலாகலமாகத் திறந்து வைக்கப்படுகின்றது. இதற்குப் பிரதம அதிதியாக சம்மாந்துறை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி அல்-ஹாஜ் எம்.எல் ஜமால்தீன் கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளார். அத்தோடு சிநேகபூர்வ உதைபந்தாட்டக் கண்காட்சிப் போட்டியும் நடைபெறவுள்ளதாக அதன் பொதுத் தலைவர் ஜனாப் ஐ.எல்.ஏ சம்சுத்தீன் தலைமையில் 26.05.2001ந் திகதி அன்று நடைபெற்ற கழக செயற்குழுக் கூட்டத்தில் தெரிவித்தார்.

# சசிகரன் சவால் கிண்ணக் கிரிக்கெட் போட்டி

டிஸ்கோ விளையாட்டுக் கழகம் நடாத்தும் இந்தச் சுற்றுப் போட்டியானது சிவானந்தா தேசிய பாடசாலை மைதானத்தில் நொக்கவுட் முறையில் நடைபெறவுள்ளது.

இந்தச் சுற்றுப்போட்டி சர்வதேச விதிகளுக்கு அமைய இடம்பெறும்.

சுற்றுப்போட்டியில் 8 அணிகள் மாத்திரம் கலந்து கொள்ளலாம். எனவே, தங்கள் அணிகள் இந்த சுற்றுப்போட்டியில் இடம்பெற விரும்பினால் விண்ணப்பிக்க வேண்டிய முகவரி கிரி கொமினிகேசன் திருமலை வீதி மட்டக்களப்பு.

விண்ணப்பப் படிவத்துடன் 14 வீரர்களின் பெயரும் அடையாள அட்டை இலக்கமும் குறிப்பிடப்படுதல் வேண்டும்.

அனுமதிக்கட்டணமாக 1500 ரூபா அறவிடப்படும்

**போட்டி விதி முறைகள்:-**

❊ போட்டிகள் யாவும் 50 ஓவர்களைக் கொண்டதாகும்.

❊ வீரர்கள் வெள்ளை நிற சீருடையில் மட்டும் விளையாட அனுமதிக்கப்படுவர்.

❊ போட்டிகள் யாவும் 8.45 மணிக்கு ஆரம்பமாகும்.

❊ குறித்த நேரத்திற்கு சமூகமளிக்கத் தவறும் பட்சத்தில் எதிர் அணிக்கு வெற்றி வழங்கப்படும்.

❊ போட்டி ஆரம்பிக்கும் முன்னர் விளையாடும் அணியின் பெயர்ப் பட்டியல் சமர்ப்பிக்கப்பட வேண்டும். இச்சுற்றுப்போட்டியின் அரையிறுதிப் போட்டியின் போது மட்டும் பந்துகள் வழங்கப்படும்.

❊ நடுவரின் தீர்ப்பே இறுதியும் உறுதியுமானதுமாகும்.

# வாசகர் நெஞ்சம்

## இன விகிதாசாரம் ஏன் பேணப்படவில்லை?

வடக்கு கிழக்கு மாகாண சபை அமைச்சுக்களில் இடம் பெற்றிருக்கும் பொறுப்பு வாய்ந்த உயர் பதவிகள் பல இன விகிதாசார அடிப்படையில் இடம் பெறாததையிட்டு கல்வி சார்ந்தோர்கள் மத்தியில் மிகுந்த கவலையும், அதிருப்தியும் தெரிவிக்கப்படுகின்றது. இது தொடர்பாக ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்காவுக்கு கல்முனை புத்தி ஜீவிகள் அமையம் அவசர பெக்ஸ் செய்தி ஒன்றை அனுப்பி வைத்துள்ளது.

கல்முனை புத்தி ஜீவிகள் அமையத்தின் தலைவர் எம்.எம்.ஏ. ஜப்பார் பொதுச் செயலாளர் நியாஸ் எம்.பக்கீர் ஆகியோர் ஒப்பமிட்டு ஜனாதிபதிக்கு அனுப்பி வைத்திருக்கும் கடிதத்தில் தெரிவித்திருப்பதாவது,

வடக்குக் கிழக்கு மாகாண சபை உருவாக்கப்பட்டதன் பின்னர் இடம் பெற்றிருக்கும் பல உயர் பதவிகள் இன விகிதாசார அடிப்படையில் இடம் பெறாதது மிகுந்த கவலையை அளித்திருக்கிறது. இச்சபை உருவாக்கப்பட்டதன் நோக்கங்களும், எண்ணங்களும் புறந்தள்ளப்பட்டிருப்பது கவனத்தில் கொள்ளப்பட வேண்டிய ஒரு விடயமாகும்.

ஐக்கியம், புரிந்துணர்வு, இனங்களுக்கிடையே ஒற்றுமை ஆகியன உறுதி செய்யப்பட வேண்டியதொன்றாகும்.

இம் மாகாண சபையின் கீழுள்ள அமைச்சுக்களில் இலஞ்சம், ஊழல், அதிகார துஷ்பிரயோகம் என்பன சர்வ சாதாரணமாகி விட்டதாகவும் கூறப்படுகின்றது. தகுதி, சேவை, மூப்பு, இன விகிதாசாரம் கவனத்தில் கொள்ளப்படாது நியமனங்கள் மற்றும் பதவி உயர்வுகள் வழங்கப்பட்டுவருவது மக்கள் மத்தியில் அதிருப்தியை ஏற்படுத்தி இருக்கிறது. இதுபோன்ற நடவடிக்கைகளால் இனங்களிடையே பல்வேறு பிரச்சினைகளும், சந்தேகங்களும் கூட தோன்றி இருக்கின்றன.

**நழீம் எம்.பதூர்தீன்**
**மருதமுனை.**

## வாசகர் நெஞ்சத்துக்குப் பாராட்டு!

இன்று சமூகத்தில் எங்கு எது நடந்தாலும் ...ளை "வாசகர் நெஞ்சம்" தினக்கதிர் தவறாமல் வரும் ... ஒரு நிலைய... நடை... லும் ஏற்படுத்தி ஒரு பயத்தை நல்ல ஒரு ... பிரச்சினைகளை ... தையும் துணிவுடன் தினக்கதிர் வெட்ட வெளிச்சமாக்கும் ... நம்பிக்கையை உண்டாக்கியுள்ள தினக்கதிரே எங்கள் பாராட்டுக்கள். வாழ்த்துக்கள்

**அதிரதன்**
**களுவாஞ்சிகுடி**

## சம்பளம் பெறுபவர்கள் கிம்பளமும் பெறுகிறார்கள்

கல்முனை நகரசபை ஊழியர்கள் பொது இடங்களில் காணப்படும் குப்பை, கூளங்களை அகற்றாமல் தனி மனிதனுக்கு சொந்தமான இடங்களில் இருக்கும் அழுக்குகளை அகற்றி அவர்களிடமிருந்து ஒரு சிறு தொகைப் பணத்தைப் பெற்றுக் கொள்கின்றார்களே தவிர, பொது இடங்கள் எப்படிப் போனாலும் இவர்களுக்கு என்ன என்று திரிகின்றார்கள். இவர்கள் தனிப்பட்ட ரீதியில் இயங்குகின்றார்களே தவிர பொறுப்பான வேலைகளில் அக்கறை இல்லாமல் இருக்கின்றார்கள்.

எனவே, நகர சபை ஊழியர்கள் தங்கள் சம்பளத்துக்கு நியமிக்கப்பட்ட வேலைகளை ஒழுங்கான முறையில் நிவர்த்தி செய்ய வேண்டும். இல்லாது போனால் நாளை நாட்டின் பல பிரச்சினைகளுக்கு முகம்கொடுக்க வேண்டி வரும். எனவே, சம்பந்தப்பட்ட கல்முனை நகரசபை அதிகாரிகள் மேற்படி ஊழியர்களை கவனமாக வழிநடாத்திச் செல்லுமாறு பொதுமக்கள் சார்பாகக் கேட்டுக்கொள்கின்றேன்.

**சபீதாபாயிஸ்**
**மருதமுனை**



தேசிய இளைஞர் சேவைகள் மன்றத் தின் மண்முனை வடக்குப் பிரதேச சம் மேளனம் ஒழுங்கு செய்த இளைஞர்தின விழாவின் போது 2000 ஆம் ஆண்டின் சிறந்த இளைஞருக் கும், சிறந்த தலைமைத்துவத்திற்குமான விருதினை மண் முனை வடக்குப் பிர தேச சம்மேளனத் தலைவர் செல்வன் கே.காந்தராஜா நடாளுமன்ற உறுப்பினர் பொன் செல்வராசாவிடமிருந்து பெறுவதைப் படத்தில் காணலாம்.

# வடக்கு கிழக்கு போர்முனைக்கு மீண்டும் ஜானகபெரேரா

(நமது நிருபர்)

**ஓய்வு பெற்ற இராணுவத்தளபதி மேஜர் ஜெனரல் ஜானக பெரேராவை வடக்கு கிழக்கு மாகாண க்ட்டளையிடும் அதிகாரியாக நியமிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.**

ஓய்வு பெற்ற இவர் தற்போது அவுஸ்ரேலியாவின் இலங்கைக்கான தூதுவராக செயற்பட்டுவருகிறார் கடந்த மாதம் வடக்கில் படையினர் மேற்கொண்ட அக்னி சுவாலை நடவடிக்கை தோல்வியடைந்ததைத். தொடர்ந்து தற்போது இவரை வடக்கு கிழக்கு கட்டளை அதிகாரியாக நியமிக்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இது தொடர்பாக வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் அவுஸ்ரேலிய அரசாங்கத்துடன் தொடர்பு கொண்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

## வெடி விபத்தில் மரணம்

(நமது நிருபர்)

திருகோணமலை 3 ஆம் கட்டைப் பகுதியில் கடந்த 27 ஆம் திகதி இடம்பெற்ற தவறுதலான வெடி விபத்தில் விடுதலைப் புலிகள் இயக்கப் உறுப்பினர் ஒருவர் உயிரிழந்துள்ளதாக 'புலிகளின் குரல்' வானொலி அறிவித்துள்ளது. கப்டன் தமிழ்முகிலன் (சண்முகவேல் பிரதாப் - யாழ்ப்பாணம்) என்பவரே இச்சம்பவத்தில் உயிரிழந்ததாக தெரிவிக்கப் படுகின்றது.

### மக்கள் வங்கி முகாமையாளரின்

## இடமாற்றத்தை ரத்துச் செய்யுமாறு கோரிக்கை

(வவுனியா நிருபர்)

மக்கள் வங்கியின் வடபிராந்திய முகாமையாளராகக் கடமையாற்றி கொழும்பில் உள்ளதலைமையகத்திற்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ள கணபதிப்பிள்ளை திருநாவுக்கரசின் இடமாற்றத்தை உடனடியாக ரத்துச் செய்து, அவர் ஆற்றி வந்த சேவையைத் தொடரச் செய்யவழிவகுக்குமாறு வவுனியா வர்த்தகர் சங்கம் மக்கள் வங்கியின் தலைவரை அவசர கடிதம் மூலம் கோரியுள்ளது.

வவுனியா வர்த்தகர் சங்கத்தின் தலைவர் ஜனாப் பி.எஸ்.அப்துல்லா, செயலாளர் கே.ஏ.செந்தில்நாதன் ஆகியோர் கையெழுத்திட்டு அனுப்பிவைக்கப் பட்டுள்ள இக்கடிதத்தில் பிரதிகள் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, வவுனியா அரசாங்க அதிபர் ஆகியோருக்கு அனுப்பி வைக்கப் பட்டுள்ளது.

கடந்த ஒரு வருடகாலமாக வடபிராந்திய முகாமையாளராக க.திருநாவுக்கரசு பணியாற்றிய காலத்தில் மக்கள் வங்கியின் சேவைகள் இப்பிரதேசத்தில் உள்ள வர்த்தகர்கள், பொதுமக்களுக்கு நல்ல முறையில் பயன்படத்தக்க வகையில் வளர்ச்சி பெற்றிருந்ததாகவும், இத்தகைய சேவையின் மூலம் பெயரளவில் வடபகுதியில் இயங்கி வந்த மக்கள் வங்கி புதுப்பொலிவு பெற்றுள்ளதாகவும் தெரிவித்துள்ள வர்த்தகர் சங்கம், இவரைத் திடீரென கொழும்புக்கு இடமாற்றம் செய்தமையானது தங்களுக்கு அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளதாகவும் தெரிவித்துள்ளது.

இதனிடையில் வடபிராந்தியத்திற்கான புதிய பிராந்திய முகாமையாளராக எஸ். இளம்பிறைநாதனை மக்கள் வங்கி நியமித்துள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

## காத்தான்குடியில் பாவனைக்குதவாத பொருட்கள் கண்டுபிடிப்பு

(எஸ்.கமலதாஸன்)

மட்டக்களப்பு ஆரையம்பதி பொதுச் சந்தையில் கடந்த 31ம் திகதி சுகாதார பரிசோதகர்கள் நடத்திய திடீர் பரிசோதனையின் போது பாவனைக்குதவாத பல பொருட்கள் கைப்பற்றப்பட்டதாக தெரிவிக்கப் படுகிறது. நூடில்ஸ், டின்மீன், பால்மா, கேக், விஸ்கட், குளுக்கோஸ் ஆகிய பொருட்களே இவ்வாறு கைப்பற்றப் பட்டது அத்துடன் பல பொருட்கள் போலித்தயாரிப்பானவை எனவும் சுகாதார பரிசோதனையில் கண்டுபிடிக்கப்பட்டது.

இவ்வாறு கண்டுபிடிக்கப்பட்ட பொருட்கள் 1980ம் ஆண்டு 2ம் இலக்க உணவுச் சட்டத்தின் மனித நுகர்விற்கு தீங்கு விளைவிப்பதாக அமைவதால் அவற்றை எரித்ததுடன் சிலவகைப் பொருட்கள் நிலத்தின் கீழ் புதைக்கப்பட்டது. சுகாதார பரிசோதகர் களான என்.விமலசேகரன், எஸ்.சந்திரசிறி, என்.கருணாகரன் ஆகியோர் கொண்ட குழுவினரே இந்தத் தேடுதல் நடவடிக்கையில் ஈடுபட்டிருந்தனர்.

## புலிதடையை......

காட்டாததுடன், தீச்சுவாலை படைநடவடிக்கையையும் ஆரம்பித்து, அதன்மீது வைக்கக் கூடிய நம்பிக்கையை கேள்விக்குள்ளாக்கியுள்ளதாலேயே தாம் தடைநீக்ககோரிக்கையை முன்வைத்திருப்பதாகப் புலிகள் தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

### எரிக்தளரவில்லை.

எவ்வாறெனினும் அண்மைக்காலமாக பேச்சு முயற்சிகளினால் ஏற்பட்ட தேக்க நிலையை நிவர்த்தி செய்ய, தற்போது நோர்வேயில் இருந்தவாறு எரிக்சொல்ஹெய்ம் தீவிரமாக முயன்று வருவதாகத் தெரிவிக்கப் படுகின்றது.

ஒஸ்லோவில் இருந்தவாறு அவர் இலங்கை அரசுடனும், அன்ரன் பாலசிங்கத்துடனும் தொடர்பு கொண்டு பேசிவருவதாகவும், எதாவது நல்ல அறிகுறிகள் தென்பட்டால் மீண்டும் அடுத்தசுற்று முயற்சிகளில் இறங்கவார் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

தற்போதுள்ள நிலையில், சமாதான முயற்சிகளுக்க ஏற்பட்டுள்ள தடையை நீக்க சர்வதேச அழுத்தங்களே உதவும் என எரிக்சொல்ஹெய்ம் கருத்து தெரிவிக்கின்றார்.

இதனாலேயே அண்மையில் அவர் அமெரிக்கா சென்று அமெரிக்க பிரதிவெளியிறவு அமைச்சருடன் பேசியதாகவும். விரைவில் அவர் புதுடில்லி செல்லவுள்ளதாகவும் தெரியவருகின்றது.

நோர்வேயின் முயற்சிகளின் விளைவாகவே அரசு மீது தற்போது சில நாடுகள் அழுத்தம் பிரயோகிக்கத் தொடங்கியிருப்பதாகவும் தெரிவிக்கப் படுகின்றது.

### ஆயர்கள்முயற்சி

இது இவ்வாறிருக்க இரத்தினபுரி ஆயர் மல்கம் ரஞ்சித்தும், மன்னார் ஆயர் இராயப்பு யோசப்பும் இவ்வாரம் இலண்டனில் அன்ரன் பாலசிங்கத்தையும், ஒஸ்லோவில் எரிக் சொல்ஹெய்மையும் சந்தித்து பேசவுள்ளதாகத் தெரியவந்துள்ளது.

## பெற்றோல் விலையை கூட்டி விற்பனை செய்தவருக்குஅபராதம்

(நமது நிருபர்)

காத்தான்குடி எரிபொருள் விற்பனை நிலையமொன்றில் ஒரு போத்தல்பெற்றோலை விலைகூட்டி விற்பனை செய்தது தொடர்பாக மட்டக்களப்பு நீதவான் நீதிமன்ற நீதிபதி சம்பந்தப்பட்ட நபருக்கு ஐயாயிரம் ரூபா அபராதம் விதித்துள்ளார்.


கடந்த மார்ச் மாதம் 29ம் திகதி மட்டக்களப்பு கச்சேரி விலைக்கட்டுப்பாட்டுபரிசோதகர் ஆ.சௌந்தரராஜா தலையிலான மூவர் அடங்கிய குழுவினர் காத்தான்குடி பெற்றோல் விற்பனை நிலையமொன்றில் சென்று ஒரு போத்தல் பெற்றோல் வாங்கிய போது அதன் விற்பனை விலையான 37-85 சதத்திற்குப்பதிலாக 40 ரூபாவிற்கு விற்பனை செய்துள்ளார்.

இதனைத்தொடர்ந்து காத்தான்குடியைச்சேர்ந்த முகமட் மொகைதீன் மொகமட் இப்றாகீம் மீது வழக்குதாக்கல் செய்யப்பட்டது.

இது தொடர்பான விசாரணை இம்மாதம் 1ம் திகதி மட்டக்களப்பு நீதவான் நீதிமன்ற நீதிபதி ஏ.எஸ்.அப்துல்கபூர் முன்னிலையில் எடுக்கப்பட்டபோது ஐயாயிரம் ரூபா அபராதம் செலுத்துமாறு உத்தரவிட்டார்.

## நேபாளத்தின்.....

இயங்கும் வரை காபந்து மன்னராக கொல்லப்பட்டமன்னர் பிரேந்திராவின்



சகோதரர் கயனேந்திரா தெரிவு செய்யப்பட்டிருப்பதும்

காபந்து மன்னராகப் பொறுப்பேற்ற கயனேந்திரா அரண்மனையில் இயந்திரத்துப் பாக்கி தற்செயலாக வெடித்ததால் இந்த அனர்த்தங்கள் ஏற்பட்டதாக மக்களுக்கு விடுத்தசெய்தியில் சொல்லியிருப்பதும்-

சூட்டுச்சம்பவம் நடந்த பொழுது துப்பாக்கியை யார் வைத்திருந்தார்களென்பது பற்றி ஒரு வார்த்தையாவது காபந்து மன்னர் கயனேந்திரா சொல்லாமலிருப்பதும் எப்படி துப்பாக்கி வெடித்தது என்பது பற்றி சொல்வது பற்றியும்-

முடிக்குரிய இளவரசர் திபேந்திராதான் துப்பாக்கியால் சுட்டார் என்று முதலில் வெளிவந்த செய்தி பற்றி கயனேந்திரா எதுவும் சொல்லாதது பற்றியும்- மன்னரும் மகாராணியும், பிள்ளைகளும் படுகொலைசெய்யப் பட்டதால் ஆத்திரமும் துக்கமும் அடைந்துள்ள நேபாள மக்கள் மேலும் மேலும் சந்தேகம் கொண்டுள்ளனர்.

சனிக்கிழமை இரவு அரச குடும்பத்தினர் இறுதிக்கிரிகைகள் முடிந்த பின் நாட்டுமக்களை அமைதிகாக்குமாறும் பிரதமர் கொய்ராலா வேண்டிக் கொண்டிருந்தார். இந்த இறுதிக்கிரிகையயின் போது அதில் கலந்து கொண்ட அரசியல்வாதிகளைப் பார்த்து அங்கு திரண்டிருந்த இலட்சக்கணக்கான மக்களில் ஒரு பகுதியினர் கூச்சலிட்டுதங்கள் அதிருப்தியை வெளிப்படுத்தினர். இதுவரை அமைதியாகவிருந்த் இனியும் அமைதியை கடைப்பிடிக்கு என்றது பற்றி அங்கிருந்துவரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

தானியங்கி துப்பாக்கி தானாகவே வெடித்ததனால் ஏற்பட்ட அனர்த்தம் என்ற காபந்துமன்னரின் விளக்கத்தில் மக்கள் திருப்தியடைவார்களா என்பது பற்றி சரியாகத் தெரியவில்லை.

இப்போதைய புதிய மன்னர் பிரேந்திராவின் சகோதரருமான கயனேந்திராதான் அரண்மனைப் படுகொலைக்குப் பின்னணியிலிருந்தவர் இப்போது கசிந்துவரும் தகவல்கள் உறுதி செய்யப்பட்டால் ஆத்திரமும், துக்கமும், பீறிட்ட நிலையிலுள்ள மக்களினால் முடியாட்சிக்கும், அரசியல் அமைப்புக்கும் படுபயங்கரமான விளைவுகள் ஏற்படுமென்று வெளிநாட்டு செய்தியாளர் ஒருவர் கருத்து தெரிவித்துள்ளார்.

இந்த கொலைகளுக்கு பின்னணியில் புதியமன்னர் தானிருந்திருக்கின்றார் என்ற வதந்திவேகமாகப் பரவிக் கொண்டிருக்கின்றது. நேபாளத்தில் நெருக்கடி உருவாகிக் கொண்டிருக் கின்றது. இப்பொழுது அனுஷ்டிக்கப்படும் ஐந்து நாள் தேசிய துக்கத்தின்போது நாடு செயலிழந்து வரும் மக்கள் வன்செயல்களில் ஈடுபடக்கூடு மென்பதால் பாதுகாப்பு நடவடிக்கைகள் அதிகரிக்கப்பட வேண்டியிருக்கின்றது. இனிநேபாள வீதிகளில் இராணுவம், பொலிசார் பாதுகாப்பு பலப்படுத்தப்படவேண்டுமென்று தெரிவிக்கப்படுகின்றது.

## திருமலையில் விஞ்ஞானக் கண்காட்சி

(திருமலை நிருபர்)

வடக்கு கிழக்கு மாகாணப் பாடசாலை மாணவர்களின் புதிய விஞ்ஞானக் கண்டுபிடிப்புக்களின் இரு நாள் (புத்தாக்க்) கண்காட்சி இன்று ஞாயிற்றுக் கிழமை காலை திருகோணமலை புனித மரியாள் கல்லூரியில் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது. இலங்கை புத்தாக்க ஆணைக்குழு வடக்கு கிழக்கு மாகாணக் கல்வி அமைச்சின் ஆதரவில் இக்கண் காட்சியை ஒழுங்கு செய்துள்ளது.

யாழ் மாவட்டப் பாடசாலை மாணவர்களின் புதிய கண்டுபிடிப் புக்கள் இக்கண்காட்சியில் இடம் பெறவில்லை. யாழ் மாவட்டத்தில் இவ்வாறான ஒரு கண்காட்சி விரைவில் நடத்தப்படும் என்றும் அப்போது யாழ் மாவட்ட மாணவர்களின் புதிய கண்டு பிடிப்புக்கள் அங்கு பார்வைக்கு வைக்கப்படும் என்றும் மாகாணக் கல்வித்திணைக்கள அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

வன்னிப் பிராந்தியத்தில் மின்சாரம் இல்லாமை மற்றும் மண்ணெண்ணை தட்டுப்பாடு காரணமாக விளக்கெரிப்பதற்கு கழிவுப் பிளாஸ்டிக்கைப் பயன்படுத்தும் தகர விளக்கு ஒன்றும் கண்காட்சியில் புதிய கண்டுபிடிப்பாக பார்வைக்கு வைக்கப்பட்டிருக்கிறது.

இக்கண்காட்சியை வடக்கு கிழக்கு மாகாணக் கல்விப் பணிப்பாளர் திரு.இ.சிவானந்தன் அங்குரார்ப்பணம் செய்து வைத்தார்.

## மட்டக்களப்பு...

மழையினால் உஷ்ணம் நீங்கி குளிரான காலநிலை ஏற்பட்டுள்ளது. இதே வேளை இன்று காலையிலிருந்து இம் மாவட்டத்தில் தொடர்ந்து மழை பெய்து வருகின்றது. மப்பும் மந்தாரமுமான காலநிலை காணப்படுவதுடன் பல இடங்களில் மழை நீர் தேங்கி நிற்கிறது.

## முன்னாள்........................

அவகாசத்துடன் கிடைத்தபோதும், இதில் பங்குபற்றுவதை நான் பெருமையாகக் கருதி வந்திருக்கிறேன். இந்தச் சபை மிக உயர்வான சபை. என்னோடு படித்தவர்களும், எனக்கு முன்பாகப் படித்தவர்களும் கூட இங்கு இருப்பதைப் பார்க்கும்போது - இந்த உயர்வான தரம்மிக்க சபையின் முன் பேசுவதற்கு - எனக்குப் பதற்றம் ஏற்படுகின்றது' நான் உணர்ச்சி வசப்படுகின்றேன்." - இப்படி அவர் கூறிக்கொண்டிருந்த சமயம், 'மைக்' பொருத்தப்பட்டிருந்த ஒலிவாங்கி மேசைத் தளத்தோடு சாய்ந்து அவர் சரிந்து வீழ்ந்தார். ஒலி வாங்கி மேசைத்தளமும் சரிந்து வீழ்ந்தது.

உடனடியாக கொழும்பு 'டேடண்ட்' ஆஸ்பத்திரிக்கு அவர் விரைந்து கொண்டு செல்லப்பட்டார். அங்கு அவர் உயிரிழந்துவிட்டதாகப் பின்னர் அறிவிக்கப்பட்டது. கொக்குவிலைச் சேர்ந்த பாலகிட்ணர், கொக்குவில் இந்துக் கல்லூரி, யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி, கொழும்பு சென்.ஜோசப் கல்லூரி ஆகியவற்றின் பழைய மாணவராவார். நீதித் துறையில் பெரிதும் மதிக்கப்பட்ட பாலகிட்ணர், நீதிவான், நீதிபதி, நீதியரசர், மேன்முறையீட்டு நீதி மன்றத்தின் தலைமை நீதியரசர் எனப் பதவியுயர்வு பெற்று நீதிச் சேவையிலிருந்து ஓய்வுபெற்றார்.

பின்னர் வடக்கு - கிழக்கில் காணாமற் போனோர் குறித்து விசாரிப்பதற்கு நியமிக்கப் பட்ட ஜனாதிபதி ஆணைக்குழுவின் ஆணை யாளராகப் பதவி வகித்தார். இவரது மூத்த மகன் அனந்த் கிருஷ்ணன் (அனந்த் பாலகிட்ணர்) 'சண்டே ஒப்சேவர்' நிறுவனத்தில் முக்கிய பொறுப்பில் பணியாற்றும் பத்திரிகையாளராவார்.

'இவருடைய இறுதிக்கிரிகை நாளை செவ்வாய்க்கிழமை இடம்பெறும்.

இப்பத்திரிகை வேல்ட் வொயிஸ் பப்ளிகேஷன் நிறுவனத்தினால் ஈஸ்ரன் கிராபிக்ஸ் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.